Registered as a Newspaper

பக்கங்கள் - 12
விலை - ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 200

வியாழக்கிழமை
13 ஜூன் 2024

வைகாசி 31 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"கெஞ்சினால் வாக்கு விழாது எண்டதால இனிமேல் மிஞ்சிப்பாக்க ரணிலார் வெளிக்கிடுறார் கண்டியளோ"

# நான் தோல்வியுற்றால் மீண்டும் வரிசையுகம்!

## மிரட்டுகிறார் ரணில்

**கொழும்பு, ஜூன் 13**

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நான் தோல்வியடைந்தால், தற்போதைய அரசாங்கத்தின் பொருளாதார மறுசீரமைப்பு தோல்வியடைந்தால் நாட்டில் மீண்டும் வரிசையுகம்தான் ஏற்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எச்சரித்துள்ளார்.**

11



## மாற்றுத் திட்டமில்லாமல் '13'ஐ நீக்கமுடியாது

### தேசிய மக்கள் சக்தியின் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 13

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தோல்வி கண்ட பொறிமுறையாக இருந்தாலும், மாற்றுத் தீர்வை முன்வைக்காமல் அதனை நீக்கமுடியாது.

11

## காற்றாலை, கனியவள அகழ்வு; மன்னார் கூட்டத்தில் காரசாரம்

மன்னார், ஜூன் 13

மன்னார் மாவட்டத்தில் 2ஆம் கட்டமாக முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை செயற்றிட்டம் மற்றும் கனிய மணல் அகழ்வுகளுக்கு எதிராக

11



## சிறுமி கர்ப்பம்: 5 பேர் கைது

முல்லைத்தீவு, ஜூன் 13

முள்ளியவளைபொலிஸ் பிரிவைச் சேர்ந்த 14 வயதுச் சிறுமி கர்ப்பமாகிய சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாடசாலை மாணவி கர்ப்பம் தரித்த சந்தேகத்தில் 59 வயதுடைய நபர் கடந்த மாதம் 28 ஆம் திகதி முள்ளியவளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

மாணவியின் கர்ப்பம்

10

ரணில், சஜித், அநுர

## 25 வீத வாக்குகள்கூட எவருக்கும் கிட்டாது

கொழும்பு, ஜூன் 13

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ரணில், சஜித், அநுர ஆகிய எவருக்கும் 25 வீதமான வாக்குகள் கூடக் கிடைக்காது என்று தெரியவந்துள்ளது.

இந்தியத் தேர்தல் தொடர்பில் கருத்துக்கணிப்பை மேற்கொண்ட அமெரிக்க நிறுவனமொன்றே, இலங்கையில் எவருக்கும் 25 வீதமான வாக்குகள் கூடக் கிடைக்காது என்று சுட்டிக்காட்டியுள்ளது. (அ-ம-6)

## இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் வடக்கில் பரவலாகப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்குமாறும், இலவசக் கல்வியை தனியார் மயப்படுத்தவேண்டாம் எனவும் மாணவர்களின் போஷாக்கினை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தியும் இலங்கை

10

## மகப்பேற்று மருத்துவர் மந்திகையில் உயிர்மாய்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 13

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் மகப்பேற்று விடுதியில் கடமையாற்றும் கொழும்பைச் சேர்ந்த 30 வயதான இளம் மருத்துவரொருவர் நேற்றுப் புதன்கிழமை பிற்பகல் மருத்துவ விடுதிக்குள் தவறான முடிவெடுத்துத் தனது உயிரை மாய்த்துள்ளார்.

அவரது காதலியெனக் கருதப்படும் இளம்பெண்

10

## நினைவேந்தல் அறிக்கை ரணிலிடம் கையளிப்பு

கொழும்பு, ஜூன் 13

இலங்கையில் ஆயுத மோதல்கள், அரசியல் அமைதியின்மை அல்லது உள்நாட்டுக் கலவரம் காரணமாக உயிரிழந்தவர்களை நினைவு கூருவது குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை அண்மையில் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம்

11

## டிப்பருடன் மோதுண்டு குடும்பத்தலைவர் பலி

யாழ்ப்பாணம், ஜூன் 13

சாவகச்சேரி - நுணாவில் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற டிப்பர் விபத்தில், குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்தார். குருநாகல் பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய நபரே உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரி நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த டிப்பர் வாகனத்துடன் மோதுண்டே குறித்த நபர் உடல் நசுங்கிச் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

10

# சகல பாடசாலைகளுக்கும் இலவசமான உணவு!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு
### சுழிபுரம் விக்ரோறியாவுக்கு பேருந்தும் வழங்கினார்

யாழ்ப்பாணம், ஜூன் 13

ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியில், நாட்டில் உள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் இலவச உணவு வழங்கப்படும் என்று சஜித் அறிவித்துள்ளார்.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கு பேருந்தொன்றை நேற்று அன்பளிப்புச் செய்த பின்னரே சஜித் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விக்ரோறியாக் கல்லூரியில் ஆயிரத்து 200 மாணவர்கள் கல்வி கற்கின்றீர்கள்.

10

## சஜித் வருகை தாமதம்; மாணவர் அந்தரிப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 13

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கு பேருந்து வழங்கும் நிகழ்வுக்காகச் சென்ற சஜித், மாணவர்களைப் பல மணிநேரம் காக்க வைத்துள்ளார்.

10

இந்து சகோதரர்களின் சமர்

## மானிப்பாய் இந்துவில் இரு நாள்கள் மோதல்!

யாழ்ப்பாணம், ஜூன் 13

'இந்து சகோதரர்களின் சமர்' எனும் தொனிப்பொருளில் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கும் இடையிலான துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி நாளை 14 மற்றும் 15 ஆம் திகதிகளில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

10

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித்தின் நிலைப்பாடு கம்மன்பில கடும் எதிர்ப்பு



கொழும்பு, ஜூன் 13

**தான் பதவிக்கு வந்தால் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவேன் எனகிளிநொச்சியில் சஜித் பிரேமதாஸ தெரிவித்தமைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது, மாகாணசபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டால் அது தேசியப் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாகும். கடந்த 37 வருடங்களில் சஜித் பிரேமதாஸவின் தந்தை ரணசிங்க பிரேமதாஸ உட்பட எந்த வொரு ஜனாதிபதியும் செய்யாததை சஜித் நடைமுறைப்படுத்த முற்படுகிறார். வடக்கும் கிழக்கும் மீண்டும் இணைக்கப்பட்டால் கிழக்கு மாகாணசபையில் முஸ்லிம்களின் தனித்துவம் இல்லாமற் போய்விடும். சஜித் பிரேமதாஸ மகாசங்கத்தினரின் எச்சரிக்கை ளையும் பொருட்படுத்தாமல் செயற்படுகிறார் - என்றார். (ஒ-6)

## நீதிமன்றம் முன்பாக

# மோ.சைக்கிள் உடைத்து திறன்அலைபேசி திருட்டு

பருத்தித்துறை, ஜூன் 13

பருத்தித்துறை நீதிமன்றத்துக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை உடைத்து திறன் அலைபேசி திருடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், சந்தேகநபரைக் கைது செய்துள்ளதுடன் திறன் அலைபேசியையும் மீட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, பருத்தித்துறை நீதிமன்ற வழக்கு நடவடிக்கை ஒன்றுக்காக கடந்த திங்கட்கிழமை வந்திருந்த பெண் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளை நீதிமன்றத்துக்கு முன்பாக வீதி ஓரத்தில் நிறுத்தியுள்ளார். அவரது சுமார் மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான அப்பிள் திறன் அலைபேசியை பின் இருக்கையின் கீழாக உள்ள பகுதியில் வைத்து பூட்டிவிட்டு நீதிமன்றத்துக்குள் சென்றுள்ளார்.

வழக்கு நடவடிக்கையின் பின்னர் வந்து பார்த்த போது மோட்டார் சைக்கிளின் பின் பகுதி உடைக்கப்பட்டு அதில் வைக்கப்பட்டிருந்த திறன்அலைபேசி திருடப்பட்டிருந்தமை தெரியவந்தது. உடனடியாகவே பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் பெண் முறைப்பாட்டை மேற்கொண்டார்.

திருடப்பட்ட திறன்அலைபேசி பாதுகாப்புக் குறியீடு இடப்பட்டிருந்த நிலையில் அதனை மந்திகையிலுள்ள அலைபேசி திருத்தகத்துக்கு திருட்டில் ஈடுபட்ட சந்தேகநபர் எடுத்துச் சென்று பாதுகாப்புக் குறியீட்டை நீக்கித்தருமாறு கேட்டுள்ளார். அந்தநபர் தொடர்பில் ஏற்பட்ட சந்தேகத்தை அடுத்து அலைபேசி திருத்துநர் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்கியுள்ளார்.

அங்கு விரைந்து சென்ற பருத்தித்துறை பொலிஸார் திறன்அலைபேசியை மீட்டதுடன் அதனை கொண்டுசென்ற நபரையும் கைது செய்திருந்தனர்.

முறைப்பாட்டை மேற்கொண்ட பெண் வரவழைக்கப்பட்டு அது அவருடைய திறன்அலைபேசி என்பது அடையாளம் காட்டப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் சந்தேக நபர் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை பொலிஸாரால் முற்படுத்தப்பட்டிருந்தார். இதன்போது திறன் அலைபேசியை உரிமைகோரும் வகையில் அதற்குரிய ஆவணங்களை மன்றில் சமர்ப்பித்து அந்தப் பெண் அடையாளம் காட்டியிருந்தார். அதையடுத்து அவருக்கு அது மீள ஒப்படைக்கப்பட்டது.

சந்தேகநபரை எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் கிருஷாந்தன் பொன்னுத்துரை உத்தரவிட்டுள்ளார். (ஒ-100)

# உற்பத்திகள் மீதான தடைகளை நீக்குக!

கொழும்பு, ஜூன் 13

பனை, தென்னைசார் உற்பத்திகள் மீதான தேவையற்ற தடைகளை நீக்குமாறு நாடாளுமன்றநிலையியற்குழுவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கள்ளுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நல்ல சந்தை வாய்ப்புள்ளது. அதேபோல் பனை, தென்னைசார் உற்பத்திகளுக்கும் நல்ல கிராக்கியுள்ளது.

இவற்றை உரியமுறையில் உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதன் மூலம் பெருந்தொகைப்பணத்தை இறைவரியாகப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-6)

# கைவிடப்பட்ட திட்டங்களுக்கு 8.75 பில்லியன் ரூபா தேவை!

## நிதி இராஜாங்க அமைச்சர் தகவல்

கொழும்பு, ஜூன் 13

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக இடை நடுவில் விடப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு 8.75 பில்லியன் ரூபா தேவை என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

கிராமப்புற வீதிகள், பாலங்கள், மதகுகள், சிறு குளங்கள், பாடசாலைக் கட்டடங்கள் அபிவிருத்தி போன்ற பல்வேறு திட்டங்கள் கிடப்பில் போடப்பட்டுள்ளன.

இதனால் மக்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். கடன் மறுசீரமைப்புத் திட்டம் பூர்த்தியானதும் இந்தத் திட்டங்கள் பூர்த்தி செய்யப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-6)

# அபிவிருத்திக்குழுக் கூட்டம்



முல்லைத்தீவு, ஜூன் 13

மாந்தை கிழக்கு பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டம், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான காதர் மஸ்தான் தலைமையில் மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

மாந்தை கிழக்குப்பிரதேச செயலாளர் இராமதாஸ் ரமேஸின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் மாந்தை கிழக்குப் பிரதேச சபை அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஒ-25-35)

# சிறுகதைத் தொகுதி அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 13

மூத்த முற்போக்கு எழுத்தாளரும், ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளருமான மு.அநாதரட்சகனின் 'பின் தொடரும் வலி' எனும் சிறுகதைத் தொகுதி அறிமுக நிகழ்வு, எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர்கூடத்தில் இடம்பெறவுள்ளது. 'தாயகம்' சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் க. தணிகாசலம் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா.செந்திவேல், ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி. முத்துலிங்கம் ஆகியோர் வாழ்த்துரைகளையும், மூத்த எழுத்தாளர் சாகித்யரத்னா ஐ. சாந்தன் நூல் அறிமுகவுரையையும், ஆசிரியரும், எழுத்தாளருமான ஸ்ரீலேகா பேரின்பகுமார் நூல் மதிப்பீட்டுரையையும், நூலாசிரியர் மு. அநாதரட்சகன் பதிலுரையையும் ஆற்றவுள்ளனர். ஆர்வமுள்ள அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தேசிய கலை இலக்கியப் பேரவையினர் அழைப்புவிடுக்கின்றனர். (ஒ-25)

# மன்னார் மடு வலயம் பெறுபேற்றில் சாதனை

வெளியான க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் அடிப்படை வசதிகளற்ற பாடசாலைகளை அதிகம் கொண்ட மடு வலயம் இம்முறை சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன் சித்தி விகிதத்தில் வடமாகாண ரீதியாக முதல் நிலையையும் அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-213)

# மடுத்திருத்தல ஆடி உற்சவம் முன்னாயத்தக் கலந்துரையாடல்

மன்னார், ஜூன் 13

மன்னார் மடுத்திருத்தலத்தின் ஆடி மாத திருவிழாவுக்கான முன்னாயத்தக் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் மதியம் மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரனின் ஏற்பாட்டில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ தலைமையில் இடம்பெற்றது.

சுகாதாரம், போக்குவரத்து, குடிநீர், மின்சாரம், பாதுகாப்பு தொடர்பாக உரிய தரப்புடன் கலந்துரையாடப்பட்டு திருவிழாவுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை ஆடி மாத திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆடி மாதம் 2ஆம் திகதி நிறைவடையும். (ஒ-56,60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சம்பள முரண்பாடுகளை தீர்ப்பதற்கு நிபுணர் குழு

**கொழும்பு, ஜூன் 13**

**அரச சேவையில் நிலவும் சம்பள முரண்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிபுணர் குழுவொன்றை நியமித்துள்ளார்.**

முன்னாள் ஜனாதிபதி செயலாளர் உதய செனவிரத்னவின் தலைமையில் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் அரச துறைகளிலுள்ள சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை மீளாய்வு செய்து திருத்தங்கள் தொடர்பான பரிந்துரைகளை இந்த நிபுணர் குழு சமர்ப்பிக்கும்.

பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை 03 மாதங்களுக்குள் வழங்குமாறு ஜனாதிபதி பணித்துள்ளார். (ச-இ)

## மருத்துவர்களுக்கு கடும் பற்றாக்குறை

கொழும்பு, ஜூன் 13

கொழும்பு தேசிய மருத்துவமனையில் 500 மருத்துவர்களுக்கும், 400 தாதியர்களுக்கும் பற்றாக்குறை நிலவுகின்றது என்று மருத்துவமனையின் பிரதிப்பணிப்பாளர் மருத்துவர் ருக்ஷான் பெல்லன தெரிவித்துள்ளார்.

மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவு, இருதய நோய்ப்பிரிவு, நரம்பியல் பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு போன்றவற்றில் மருத்துவர் பற்றாக்குறை அதிகளவில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

4 ஆயிரம் மருத்துவர்களும், தேசிய மருத்துவமனையின் 400 தாதியர்களும் 2022 ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் பின்னர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

பற்றாக்குறையாக உள்ள இடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்யாமையால் சுகாதாரத்துறை மேலும் நெருக்கடிகளைச் சந்திக்கும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (ஏ-இ)

## உயர்வடைகிறது டெங்கு அபாயம்



கொழும்பு, ஜூன் 13

சீரற்ற காலநிலை காரணமாக டெங்கு அபாய வலயங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 11 நாள்களில் மாத்திரம் 971 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இதுவரை நாடளாவிய ரீதியில் 25 ஆயிரத்து 891 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இந்தக் காலப்பகுதியில் 9 டெங்கு மரணங்களும் பதிவாகியுள்ளன.

டெங்கு அபாய வலயங்களின் எண்ணிக்கையும் 14 ஆக அதிகரித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தையடுத்து அதிக டெங்கு நோயாளர்கள் யாழ். மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர். என்றும் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-இ)

## தொற்றாநோய் இறப்பு உயர்வு

நாட்டில் வருடாந்தம் 89 வீதமான உயிரிழப்புகளுக்கு தொற்றாநோய்களே பிரதான காரணம் என்று சுகாதார அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பில் சுகாதார அமைச்சின் செயலாளர் விசேட மருத்துவ நிபுணர் பாலித மஹிபால தெரிவிக்கையில்,

தொற்றா நோய் காரணமாக நாளாந்தம் 50 தொடக்கம் 60 வயதுக்குட்பட்டவர்களில் பத்துப் பேரில் நால்வர் அல்லது ஐவர் உயிரிழக்கின்றனர். வருடாந்தம் சுமார் 60 ஆயிரம் புதிய நோயாளர்கள் இனம்காணப்படுவதுடன் 4ஆயிரம் உயிரிழப்புகளும் சம்பவிக்கின்றன.

அதிகளவானோர் இதய நோயால் உயிரிழப்பதாகவும் தெரியவந்துள்ளது. இவை தொடர்பில் பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டிய தேவை எழுந்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

## பரீட்சைப் பணியிலிருந்து விலகும் ஆசிரியர்கள்!

கொழும்பு, ஜூன் 13

கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியிலிருந்து ஆசிரியர்கள் விலகிக் கொள்ளத் திட்டமிட்டுள்ளனர்.

சம்பள முரண்பாடுகளை நீக்குதல் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து அவர்கள் இந்த நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளனர்.

பல வருடங்களாக நிலவும் சம்பள முரண்பாடுகளை நீக்குவது மட்டுமன்றி, பரீட்சை விடைத்தாள்களுக்கான கொடுப்பனவுகளை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய இம்மாதம் 26ஆம் திகதி அனைத்து ஆசிரியர்களும் சுகவீன விடுப்பு எடுக்கும் தொழில் நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

## சுப்பர் 8 சுற்றுக்கு இந்தியா தகுதி!

ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், அமெரிக்காவைத் தோற்கடித்து சுப்பர் 8 சுற்றுக்குள் நுழைந்தது இந்தியா.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணித் தலைவர் ரோகித், களத்தடுப்பைத் தீர்மானித்தார். முதலில் துடுப்பெடுத்தாடிய அமெரிக்கா 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்களை இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றது. நிதிஷ்குமார் அதிகபட்சமாக 27 ஓட்டங்களைப் பெற்றார். அர்ஷ்டீப் சிங் அபாரமான பந்துவீச்சை வெளிப்படுத்தினார். அவர் 4 ஓவர்களை வீசி வெறும் 9 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்து 4 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணிக்கு நட்சத்திர வீரர் கோலி ஓட்டமெதையும் பெறாது ஆட்டமிழந்து ஏமாற்றினார். ரோகித்தும் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க 10 ஓட்டங்களில் ஆரம்ப வீரர்களை இழந்தது இந்தியா. பன்ட் 18 ஓட்டங்களைப் பெற்று திருப்பத்தை ஏற்படுத்தினார். அதன் பின்னர் இணைப்பாட்டம் அமைத்த சூரியக்குமார் யாதவ் மற்றும் துபே இருவரும் நிதானமாக ஆடி 10 பந்துகள் மீதமிருக்கையில் அணியை வெற்றிபெற வைத்தனர். சூரியகுமார் யாதவ் 50 ஓட்டங்களுடனும், துபே 31 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர். (ம)





பெற்றாரோட இருக்கிறதுதான் பிள்ளையளுக்குப் பாதுகாப்பெண்ட நிலைமையெல்லாம் தலைகீழாகி கனநாளாப் போட்டுது. அண்டைக்கு ஒரு சிங்கள எல்லைக் கிராமத்தில ஒரு சின்னப்பிள்ளைக்கு சோத்துக் கையால அறைஞ்ச தகப்பன்ர வீடியோ பாத்திருப்பியள். அஞ்சாறு அடிக்கு அங்கால போய் அந்தப் பிள்ளை விழுகிறமாதிரி அடிக்கிற அளவுக்கு அரக்கனா இருந்திருக்கிறார் அந்தத் தகப்பன். சிங்கள ஆக்கள் மட்டுமில்லை, எங்கட தமிழ் ஆக்களும் இப்பிடி பிள்ளையளை வதைக்கிறதில விண்ணர்தான்.

போனகிழமை யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில 12 வயதுப் பொம்பிளைப் பிள்ளையொண்டு தன்ர பேர்த்தியாரோட வந்து அட்மிட் ஆகியிருக்கு. அந்தப்பிள்ளைக்கு உடம்பு முழுக்க ஒரே அடிகாயம். என்னெண்டு விசாரிச்சா, அந்தப் பிள்ளையின்ர சொந்த இடம் கிழக்கு மாகாணத்தில உள்ள கல்லடி. தாய்க்காரிதான் இப்பிடி அந்தப் பிள்ளைக்கு அடிச்சு ஆய்க்கினை பண்ணின விசயம் வெளியில வந்திருக்கு. பிள்ளையின்ர தகப்பன் வெளிநாட்டில. தாய்க்காரி அவரை விட்டிட்டு இன்னொருத்தரைக் கட்டிபோட்டா. அதாலதான் பிள்ளைக்கு இப்பிடி அடி, உதையாம். பேரப்பிள்ளை எப்பிடியிருக்கு எண்டு பாக்கப்போன இடத்திலதான், இப்பிடி தாய்க்காரி அந்தப் 12 வயதுப்பிள்ளையைச் சித்திரவதைசெய்யிற விசயம் தெரியவந்திருக்கு. அதால தன்னோட வீட்டை கூட்டிக்கொண்டு போற மாதிரி அவையைப் பேய்க்காட்டிப்போட்டு, யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில கொண்டந்து சேர்த்திருக்கிறா.

மட்டக்களப்பில தாய்க்காரிக்கு பிள்ளையான் கட்சியின்ர கடும் சப்போர்ட் இருக்காம். அதாலதான் அங்கத்தை ஆஸ்பத்திரியில சேர்க்காமல் யாழ்ப்பாணத்துக்கு கொண்டந்திருக்கிறா. ஆனால் பிள்ளையை ஆஸ்பத்திரியில சேர்த்த விசயம் எப்பிடியோ தாய்க்காரிக்குத் தெரிஞ்சு போட்டுது. உடனேயே அவா பிள்ளையான்ர ஆக்களைப் பிடிச்சு, 'என்ர பிள்ளையை பேர்த்தியார்க்காரி கடத்திக்கொண்டு போட்டா' எண்டு கள்ள முறைப்பாடு குடுத்திருக்கிறா. அந்த முறைப்பாட்டை நம்பி, 12 வயதுப் பிள்ளையை மீட்கவெண்டு கிழக்குப் பொலிஸ்காரர் யாழ்ப்பாணத்துக்கு வந்திருக்கினம்.

இப்பிடி அந்தத் தாய்க்காரி ஏதும் ஏடாகூடம் செய்வா எண்டு தெரிஞ்சதால, யாழ்ப்பாணப் பொலிஸ்காரர் அந்தப் பிள்ளையை சிறுவர் நீதிமன்றத்தில பாரப்படுத்திப் போட்டினம். அதால நீதிமன்றம் தான் அந்தப் பிள்ளை ஆரோட இருக்கலாம் எண்டு முடிவு செய்யோணும். நீதிமன்றத்துக்கு பிள்ளையைப் பொலிஸ் கூட்டிக்கொண்டு வரேக்க தாய்க்காரி நாலைஞ்சு பேரைக் கூட்டிக்கொண்டு வந்து, நீதிமன்ற வாசலில வைச்சு பெரும் அட்டகாசமாம். ஆரெண்டு தெரியேலை. மரியாதையா அம்மாவோட போகப்போறன் எண்டு சொல்லு எண்டெல்லாம் பொலிஸுக்கும் பிள்ளைக்கும் கடும் வெருட்டு. 'நீ ஆரோட இருக்கப்போறாய்?' எண்டு நீதிபதி கேக்க, அந்தப் பிள்ளை கொஞ்சம் கூட யோசிக்காமல் பேர்த்தியாரோட இருக்கப்போறன் எண்டு கையைக் காட்டியிருக்கு. அப்ப அந்தப் பிள்ளை நீதிமன்றத்தின்ரையும், யாழ்ப்பாணப் பொலிஸின்ரையும் புண்ணியத்தால அடி உதையில இருந்து தப்பி பேர்த்தியாரோட பாதுகாப்பா போட்டுது. ம்ம்ம்... இனிமேல் பிள்ளையளின்ர விசயத்தில பெத்த தாய், தகப்பனைக் கூட நம்பேலாத கலிகாலமாப்போட்டுது கண்டியளோ.



- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் ஊற்றெடுக்கும். காரியம் அனுகூலமாக முடியும். உங்கள் உடல் ஆரோக்கியம் மேம்படும். உறவினர் வருகையால் செலவுகள் ஏற்படும். நன்மைகள் அதிகரிக்கும். சக வியாபாரிகளால் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** புதிய முயற்சிகளை தொடங்குவது சாதகமாக முடியும். செலவுகளால் கையிருப்பு குறையும். சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். சங்க டங்கள் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வியாபாரம் சுமாராகத்தான் இருக்கும்.

**மிதுனம்:** மகிழ்ச்சியான நாள். துணிச்சலுடன் முடிவெடுப்பீர்கள். எடுத்த காரியத்தைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும்.

**கடகம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவுமிருக்காது. சகோதரர்களால் செலவுகள் ஏற்படும். பணவரவுக்கு வாய்ப்புஏற்படும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததைவிட விற்பனையும் லாபமும் குறைவாகத்தான் இருக்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. பண உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். உடல் ஆரோக்கியம் மேம்படும். காரியங்கள் அனுகூலமாகும்.பாதிப்பு இருக்காது.

**கன்னி:** பணவரவு திருப்தி தரும். பிள்ளைகளின் உடல்நலனில் கவனம் தேவை. எதிர்பாராத செலவுகள் ஏற்படும். குழப்பங்கள் ஏற்படும். செலவு செய்ய நேரிடும். இலாபம் எதிர்பார்த்தபடி இருப்பது மகிழ்ச்சி தரும்.

**துலாம்:** மனதில் குழப்பங்கள் நீங்கி உற்சாகம் ஏற்படும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். வெளியூர்ப் பயணங்களைத் தவிர்க்கவும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வியாபாரத்தில்விற்பனை சுமாராகத்தான் இருக்கும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். செலவு செய்ய நேரிடும். மற்றவர்களுடன் வீண் விவாதத்தில் ஈடுபடவேண்டாம். அனுசரித்துச் செல்வது நல்லது. இடையூறுகள் நீங்கும்.

**தனுசு:** உற்சாகம் அதிகரிக்கும். விறுவிறுப்பாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். கருத்து வேறுபாடு நீங்கும். வியாபாரம் விறுவிறுப்பாக நடைபெறும். ஆஞ்சநேயரை வழிபட நற்பலன்கள் அதிகரிக்கும்.

**மகரம்:** இழுபறி நிலை மாறி, அனுகூலம் உண்டாகும். வெளியூர்ப் பயணம் தவிர்க்கவும். சக வியாபாரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். பணியாளர்களுக்காக செலவு செய்ய நேரிடும்.

**கும்பம்:** உற்சாகமான நாள். காரியங்கள் அனுகூலமாகும். அரசாங்கக் காரியங்கள் இழுபறியாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மனவருத்தம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பொறுமையாக நடந்து கொள்வது அவசியம்.

**மீனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு சகோதரர்களால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தந்தையின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

அரியாலை வெட்டுக்குளம் அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் 19ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் 20ஆம் திகதி தீர்த்தோற்சவமும் அன்றைய தினம் மாலை 6 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளன என ஆலய பரிபாலனசபையினர் தெரிவித்துள்ளனர். (எ)




## நமீபியாவை வீழ்த்தியது அவுஸ்திரேலியா

ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் 24 ஆவது ஆட்டத்தில் நமீபியா அணியை 9 விக்கெட்டுகளால் வெற்றிகொண்டது அவுஸ்திரேலிய அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நமீபியா அணி 17 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 72 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 5.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 74 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. (எ)

## மழையால் ஆட்டம் நிறுத்தம்

ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை - நேபாள அணிகளுக்கிடையே நடைபெறவிருந்த ஆட்டம் மழை காரணமாகக் கைவிடப்பட்டது.

தொடர்ச்சியாக மழை பெய்து கொண்டிருந்த காரணத்தால் ஆட்டம் பந்து எதுவும் வீசப்படாமலேயே கைவிடப்பட்டது.

ஆட்டம் கைவிடப்பட்டதையடுத்து இலங்கை மற்றும் நேபாள அணிகளுக்குத் தலா ஒரு புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன. (எ)

## சுகாதாரமற்ற உணவு விற்பனை மூவருக்கு ரூ. 35,000 தண்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

சுகாதாரமற்ற முறையில் உணவு விற்பனை செய்த தெருவோர வியாபார நிலையங்களின் உரிமையாளர்களுக்கு நீதிமன்றம் தண்டம் விதித்துள்ளது.

திருநெல்வேலி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பா.சஞ்சீவன் தலைமையிலான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் குழுவால் திருநெல்வேலி, கொக்குவில் பகுதிகளில் உள்ள தெருவோர உணவு வியாபார நிலையங்கள் கடந்த மாதம் பரிசோதிக்கப்பட்டன. மருத்துவச் சான்றிதழ் இன்றியும், தனிநபர் சுகாதாரம் இன்றியும் உணவை கையாண்ட வியாபார நிலையங்கள் மற்றும் அடிப்படையான சுகாதார வசதிகள் இன்றி இயங்கிய வியாபார நிலையங்கள் இனங்காணப்பட்டன.

இனங்காணப்பட்ட மூன்று வியாபார நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக யாழ். மேலதிக நீதிவான் நீதிமன்றில் கடந்த திங்கட்கிழமை வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. விசாரணைகளை மேற்கொண்ட மேலதிக நீதிவான் செ. லெனின்குமார், மூவருக்கும் மொத்தமாக 35 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன் கடும் எச்சரிக்கையும் வழங்கினார். (எ-25-26-125)

## வேலைவாய்ப்பு தொழிற்சந்தை

யாழ்ப்பாணம், ஜூன் 13

தென்மராட்சிப் பிரதேசத்தில் வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருப்போருக்கான தொழிற்சந்தை நாளை வெள்ளிக்கிழமை சாவகச்சேரி சிவன் கோவில் வீதியிலுள்ள கலை மன்ற கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களமும் பிரதேச செயலகமும் இணைந்து இந்தத் தொழிற்சந்தையை நடத்தவுள்ளன.

தொழிற்சந்தையில் வேலைவாய்ப்பு வழங்கல், தொழில்பதிவு மேற்கொள்ளல் மற்றும் தொழிலில் வழிகாட்டல் ஆகியவை குறித்து பயிற்சி வழங்கப்படவுள்ளது. (ச-9-159)



## அராலி சரஸ்வதி அசத்தல் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ்ப்பாணக் கல்லூரியால் நடத்தப்பட்ட 'சுகிர்தம் ஆர்னல்ட்' ஞாபகார்த்த வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் அராலி சரஸ்வதி இந்துக் கல்லூரியின் 18 வயதுப் பெண்கள் அணி வெற்றிபெற்று சம்பியனைத் தனதாக்கியுள்ளது.

அதேநேரம் 14 மற்றும் 18 வயதுப் பிரிவு பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகளிலும் இரண்டாம் இடங்களை அராலி சரஸ்வதி இந்துக் கல்லூரி பெற்றுள்ளது. (ச-555)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மும்மூர்த்திகளின் வருகையும் தமிழர் பிரச்சினையும்

ஜனாதிபதித் தேர்தல் களம் வழமைக்கு மாறாக இம்முறை கொதிப்பாகவே இருக்கின்றது. தேர்தல் நடக்குமா இல்லையா என்ற கேள்வி எல்லோர் மனதிலும் இழையோடிக்கொண்டிருந்தாலும், தேர்தலுக்கான ஆயத்தங்கள் அதிவேகமாக முன்னெடுக்கப்பட்டு வருவதையே, தென்னிலங்கை சிங்கள வேட்பாளர்களின் வடக்கு வருகை எடுத்துக்காட்டுகின்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரச நிதியில் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களின் திறப்பு விழா என்ற போர்வையில் வடக்குக்கு வந்து சென்றார். அவரைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் இறுதியாக அநுரவும் வந்து சென்றிருக்கின்றனர். அவர்கள் தமிழ் மக்கள் மீதான பரிவால் இப்படிப் படையெடுத்து வரவில்லை. மாறாக தங்கள் வாக்கு வங்கியை உறுதிப்படுத்திக் கொள்ளவே வருகின்றனர். இவர்களது நடவடிக்கைகள், தமிழ் மக்கள் தமிழ்ப்பொதுவேட்பாளரை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஆதரிப்பது நூற்றுக்கு நூறு வீதம் சரியென்பதையே பறைசாற்றுகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்குக்கு வருகை தந்தபோது, இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் 13ஆவது திருத்தத்தையே முன்மொழிந்தார். அதுவும் பொலிஸ் இல்லாத அதிகாரத்தையே வழங்க முடியும் என்று குறிப்பிட்டார். அதன் பின்னர் சஜித் பிரேமதாஸ கிளிநொச்சியில் வைத்து 13ஆவது திருத்தத்தை அரசமைப்பில் உள்ளவாறே நடைமுறைப்படுத்துவேன் என்று கூறினார். காணி, பொலிஸ் அதிகாரங்கள் உள்ளடங்கலாக 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவீர்களா? என அவரிடம் யாழ்ப்பாணத்தில் வைத்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பிய போது அதற்கு ஆம் என்று பதிலளித்திருந்தார். ஆனால் அவரது கட்சியினரோ கொழும்பில் வைத்து புதுவிளக்கம் கொடுத்திருக்கின்றனர். சுற்றாடல் மற்றும் சமூக பொலிஸ் அதிகாரங்களை மாத்திரமே வழங்குவதைத் தான் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கூறியிருப்பார் என்று குறிப்பிட்டுள்ளனர். சஜித் கிளிநொச்சியில் கூறிய கருத்துக்கு தென்னிலங்கை பேரினவாதிகள் வழமைபோன்று நாட்டைப் பிரிக்கின்றார் என்ற கூச்சலைத் தொடங்கியதுமே, தங்கள் சுருதியை மாற்றத் தொடங்கிவிட்டனர் சஜித் அணியினர்.

இவர்களைத் தொடர்ந்து இறுதியாக வந்தவர்தான் அநுர. தமிழர்களின் தாயகமான வடக்கு - கிழக்கை பிரித்தவர்கள் இவர்கள். தமிழ் மக்கள் மத்தியில் இந்த வடு ஆறாத ஒன்று. ஆனால் இப்போதும்கூட அதற்கு சிறிதும் வருத்தம் தெரிவிக்காமல், கடந்த காலத்தை மறந்து விடுங்கள் என்று சாதாரணமாகச் சொல்லிச் சென்றிருக்கின்றார் அநுர. அதை எப்படிக் கடந்து செல்ல முடியும்? ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நல்லாட்சிக் காலத்தில் பிரதமராக இருந்தபோது, மறப்போம் மன்னிப்போம் என்ற சுலோகத்தைத் தூக்கிப்பிடித்திருந்தார். அதே பாணியில்தான் அநுரவும் கருத்தைச் சொல்லியிருக்கின்றார்.

இவர்கள் மூவரும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இறுதிக்கட்ட போரின் போது இழைக்கப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பில் எடுக்கப்போகும் நடவடிக்கைகள் தொடர்பில் வாயே திறக்கவில்லை. அதுமாத்திரமல்ல, தமிழர்களுக்காக குரல் கொடுப்பதாகச் சொல்லிக்கொள்ளும் இலங்கைத் தமிழரசுக் கட்சியும், தங்களைச் சந்தித்த சஜித், அநுரவிடமும் போர்க்குற்றம் தொடர்பில் பேசவில்லை. இலங்கைத் தமிழரசுக் கட்சியும் அதைக் கைவிட்டு பல காலமாகின்றது.

இறுதிக்கட்டப் போரின்போது தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலைக்கு நிலைநாட்டப்படுகின்ற நீதியூடாக கிடைக்கின்ற அரசியல் தீர்வே, தமிழர்களுக்கு என்றும் பாதுகாப்பானதாகவும் நிரந்தரமானதாகவும் இருக்கும். ஆனால் அப்படிபட்ட தீர்வு இவர்களால் எட்டப்படுவதற்கு வாய்ப்பில்லை. எனவே ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் இவர்கள் தொடர்பில் கணக்கெடுக்கவே தேவையில்லை என்பதுதான் உண்மை. அவர்கள் வடக்குக்கு வந்து தங்கள் உண்மை முகங்களை காட்டிச்செல்வதற்கு தமிழ்மக்கள்நன்றியுடையவர்களாக இருக்கவேண்டும். இவர்கள் யாருக்காவது வக்காலத்து வாங்கிக்கொண்டு தமிழ் அரசியல்வாதிகள் வந்தால் அவர்களை எதிர்காலத்தில் தமிழர்கள் தங்கள் பிரதிநிதிகளாக்காமல் பார்த்துக்கொண்டால் சரி.




# ஜனாதிபதி பதவி நீடிப்பு அரசமைப்புக்கு முரண்!

### பவ்ரல் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 13

அரசமைப்பின் 19ஆம் திருத்தத்துக்கு அமைய ஜனாதிபதியின் பதவிக்காலத்தை ஐந்து வருடங்களுக்கு மேல் அதிகரித்துக்கொள்ளமுடியாது. ஜனாதிபதித் தேர்தல் உரிய காலத்தில் நடத்தப்படவேண்டும் என்று பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

அரசமைப்பின் பிரகாரம் மக்கள் ஆணை இன்றி, நாட்டின் ஜனாதிபதிக்கு 5 வருடங்களுக்கு அப்பால் சென்று ஜனாதிபதிப் பதவியை வகிக்கச் சட்ட ரீதியிலான அனுமதியில்லை.

தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த எஞ்சிய காலப்பகுதி வரைக்குமே ஜனாதிபதியாகப் பதவி வகிக்கமுடியும். ஜனாதிபதித் தேர்தலை உரிய காலத்தில் நடத்துவது கட்டாயமாகும் என்றும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

## சூறையாடப்பட்ட பணத்தை எம் ஆட்சியில் மீட்போம்

### தேசிய மக்கள் சக்தி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 13

எதிர்வரும் தேர்தல்களில் எமது கட்சி ஆட்சி அமைத்தால் களவாடப்பட்ட பணம் மீளப்பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கான புதிய சட்டங்கள் உருவாக்கப்படும் என்று தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் இரத்துச் செய்யப்படும். நிதிச்சலவை, இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்புச் சட்டம் உள்ளிட்ட சட்டங்களில் திருத்தங்கள் செய்யப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## இந்திய முதலீடுகளை ஐ.ம.சக்தி ஈர்க்குமாம்



கொழும்பு, ஜூன் 13

இந்திய நிறுவனங்கள் முதலீடு செய்வதற்கு தனது ஆட்சிக்காலமே பொருத்தமானது என்று எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

எனது ஆட்சியில் 5 இலட்சம் இந்திய நிறுவனங்களை இலங்கையில் முதலீடு செய்வதற்கு அழைப்பு விடுக்கவுள்ளேன். இந்திய நிறுவனங்கள் முதலீடு செய்வதற்குரிய சூழலை உருவாக்குவதுடன் அவர்களுக்குத் தேவையான சகல உதவி ஒத்தாசைகளையும் வழங்கவுள்ளேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-6)

## வாக்குரிமை பறிப்புக்கு இடமளிக்கவே முடியாது

### பேராயர் மல்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 13

ஜனாதிபதியின் ஐந்தாண்டு பதவிக்காலத்தின் பின்னர் தேர்தல் நடத்தப்படுவது மக்களின் உரிமைகளில் ஒன்று. அதைப் பறிப்பதற்கு இடமளிக்கமுடியாது என்று கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

நாட்டில் அரசியல் சாசனத்துக்கு அமைவாக ஜனாதிபதியின் பதவிக்காலம் பூர்த்தியாவதுடன் தேர்தல் நடத்தப்படவேண்டும். மக்களின் உரிமையை தட்டிப்பறிப்பதற்கு எவருக்கும் இடமளிக்கமுடியாது. தங்களது ஆட்சி அதிகாரத்தை மேலும் சில ஆண்டுகளுக்கு நீடித்துக்கொள்ள சிலர் மறைமுக முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

## முட்டை நுகர்வு எட்டு மில்லியன்!

நாட்டில் தினசரி முட்டை நுகர்வு சுமார் 8 மில்லியனாக அதிகரித்துள்ளது என்று பொருளாதார ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இலங்கையின் நாளாந்த முட்டை உற்பத்தி சுமார் 6 மில்லியனாக உள்ளதுடன், தேவைக்கும் வழங்கலுக்குமிடையில் சுமார் 2 மில்லியன் முட்டைகள் பற்றாக்குறை காரணமாக, நாட்டின் முட்டை சந்தையில் கேள்வி நிலை அதிகரித்துள்ளது. (ச-இ)

**நாளை**

14.06.2024
வெள்ளிக்கிழமை
வைகாசி - 32

சுபநேரம் : 05.53 - 07.23
ராகுகாலம் : 10.23 - 11.53

**நாளொரு நல்வார்த்தை**

**கலங்காத உள்ளம் படைத்தவர்களே இறுதி வெற்றிக்குரியவர்கள்.**

- நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோடிக்கு பாக். வாழ்த்து சீனா மௌனம்

புதுடில்லி, ஜுன் 13
இந்தியப்பிரதமர் மோடிக்கு பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷரீப் உட்படப் பல்வேறு தலைவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர். சீன ஜனாதிபதி ஜின் பிங் எதுவும் வெளியிடவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

சீன வெளியுறவுப் பேச்சாளரிடமிருந்து கடந்த சனிக்கிழமை இந்திய வெளியுறவு அலுவலகப் பேச்சாளர் ரந்தீர் ஜெய்ஸ்வாலுக்கு ஒரு வாழ்த்துச்செய்தி கிடைத்தது. எனினும் வேறு உயர்மட்ட தலைமைகளிடமிருந்து எந்தவித செய்தியும் கிடைக்கவில்லை என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதேவேளை, பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷரீப், மூன்றாவது முறையாக பிரதமராகத் தெரிவுசெய்யப்பட்ட மோடிக்கு எனது வாழ்த்துகள். இந்திய மக்கள் உங்கள் மீது நம்பிக்கை வைத்துள்ளனர். உங்களது மக்களின் பாதுகாப்பில் எப்போதும் அக்கறையாக இருங்கள் எனத் தெரிவித்துள்ளார்.

இதற்கு எமது மக்களின் பாதுகாப்பில் நாங்கள் உறுதியாக உள்ளோம் என்று மோடி பதிலளித்தார் (ச-6)



# '13' விசித்திரமல்ல! சஜித் தெரிவிப்பு

கொழும்பு, ஜுன் 13

**13 ஆவது அரசமைப்புத் திருத்தம் என்பது விசித்திரமான ஒன்றல்ல, அது எமது நாட்டின் சட்டப் புத்தகத்தில் உள்ள விடயமொன்றாகும். மாகாண சபைத்தேர்தலை நடத்துவதற்குத் தேவையான அனைத்து சட்ட ரீதியிலான ஏற்பாடுகளையும் செய்து, மாகாணசபைக் கட்டமைப்பின் ஊடாக அனைவருக்கும் நீதி நியாயத்தைப் பெற்றுத்தருவோம்.**

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், கடந்த திங்கட்கிழமை வடமராட்சி கொற்றாவத்தை அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு திறன் வகுப்பறையைத் திறந்து வைக்கும் நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்துக்கு மாத்திரமல்ல முழு நாட்டுக்கும் நல்லிணக்கம், சகோதரத்துவம், பொறுப்புக்கூறல் மற்றும் பொறுப்புணர்ச்சி அவசியம். பல்வேறு தலைவர்கள் யாழ்ப்பாணம் மக்களை அரசியல் இசை நாற்காலி விளையாட்டுக்கு உட்படுத்தியுள்ளனர்.

13 ஆவது அரசமைப்புத் திருத்தம் என்பது விசித்திரமான ஒன்றல்ல, அது எமது நாட்டின் சட்டப் புத்தகத்தில் உள்ள விடயமொன்றாகும். ஐக்கிய மக்கள் சக்தி அரசில் முன்னைய தேர்தல் முறையிலேயே மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்படும்.

அத்துடன், யாழ். மாவட்டத்தையும் வடக்கு மாகாணத்தின் ஏனைய பகுதிகளையும் அறிவின் மையங்களாக மாற்றுவது யதார்த்தமாக்கப்படும்- என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# சமுர்த்தி மாதிரி உற்பத்திக் கிராமங்கள்

பளை, ஜுன் 13
பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்திலுள்ள கச்சார்வெளி மற்றும் வேம்பொடுகேணி ஆகிய கிராமங்கள் சமுர்த்தி உற்பத்தி மாதிரிக் கிராமங்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

சமுர்த்தி உற்பத்தி மாதிரிக்கிராமம் மற்றும் பரவலான தனிநபர் கருத்திட்டத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுடனான கலந்துரையாடல் நேற்று முன்தினம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதேச செயலாளர் த.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் சமுர்த்தி உதவி ஆணையாளர் கலந்து கொண்டார். (ஓ-9)

# பாதயாத்திரைக் குழுவுக்கு 5ஆம் கட்ட உதவிகள்



பருத்தித்துறை, ஜுன் 13
கதிர்காமக்கந்தன் ஆடிவேல் விழாவை முன்னிட்டு தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து கதிர்காமக்கந்தன் ஆலயத்தை நோக்கிச் சைவமரபுப் பாரம்பரியம்மிக்க பாதயாத்திரையை முன்னெடுத்துள்ள பாதயாத்திரைக் குழுவினருக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு கல்லடியிலுள்ள பேச்சியம்மன் ஆலயத்தில் வைத்துச் சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் ஒருதொகுதி உதவிப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் ஆச்சிரமத் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று மேற்படி உதவிகளை வழங்கி வைத்தார். (ஓ-66)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்ப்பாணம், ஜுன் 13
யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தின், பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும் நல்லூர் சட்டநாதர் சிவன் கோவில் மண்டபத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

சங்கத் தலைவர் ஆ.உதயசங்கர் தலைமையில் இடம்பெறவுள்ள கூட்டத்தில் பிரதம விருந்தினராக வடமாகாண சிரேஸ்ட பதில் பொலிஸ்மா அதிபர் திலக் சி.ஏ.தனபால, சிறப்பு விருந்தினராக கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜே.சிவகௌரி, கௌரவ விருந்தினராக வலி.வடக்குப் பிரதேச சபை முன்னாள் தவிசாளர் சோ.சுகிர்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ப)



# கலந்துரையாடல்



கிளிநொச்சி, ஜுன் 13
ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தால் (யூ.என்.டி.பீ.) கிளிநொச்சி மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வீட்டுத்தோட்ட நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

மேலதிக மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் திட்டமிடல் பணிப்பாளர் கி.ஸ்ரீபாஸ்கரன், யூ.என்.டி.பீ. நிறுவனத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் மஞ்சுளபண்டார, செயற்றிட்ட முகாமையாளர் தமிழ்ச்சந்திரசேகர, மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர், பிரதேச செயலகங்களின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள், கமநலசேவைத்திணைக்கள உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ஓ-25-13-13)

# தமிழ்நாட்டின் ஆட்சியை 2026 இல் கைப்பற்றுவோம்

*சீமான் உறுதி*

சென்னை, ஜுன் 13
நடைபெற்று முடிந்த இந்திய மக்களவைத் தேர்தலில் கிடைத்த அங்கீகாரத்தை ஊக்கமாகக் கொண்டு, 2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் மாநிலத்தின் ஆட்சி அதிகாரத்தைப் பிடிக்க உறுதியேற்கிறோம் என்று நாம் தமிழர் கட்சி முதன்மை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்த அறிக்கையில்:-

அண்மையில் நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் தனித்துப் போட்டியிட்ட நாம் தமிழர் கட்சி, 8,2 விழுக்காடு வாக்குகளைப் பெற்றிருக்கிறது. இந்தத் தேர்தலில் வெற்றி எனும் இலக்கை அடையாவிட்டாலும், கணிசமான வாக்குகளைப் பெற்று, மாநிலக் கட்சியாக அங்கீகாரம் பெற்றிருப்பது பெரும் மகிழ்வைத் தருகிறது.

அதிகார முறைகேடு, அரசியல் நெருக்கடி எனப் பல அடக்குமுறைகளைத் தாண்டியும், சாதி, மதம், மது, பணம் எனப் புரையோடிப் போன சமூகத்தீங்குகளைக் கடந்தும் நாம் தமிழர் கட்சி பெற்றிருக்கும் வாக்குகளென்பது பெரும் ஜனநாயக மறுமலர்ச்சியாகும் - என்றுள்ளது. (ச-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் விசாரணைகள்; மற்றொரு குழு களத்தில்!

கொழும்பு, ஜூன் 13
ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணை முன்னெடுப்பதற்கு மற்றொரு ஜனாதிபதி விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள அறிக்கையில்,
2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் தொடர்பான முழுமையான புலனாய்வுத் தகவல் குறித்து அரச புலனாய்வுச் சேவை, தேசிய புலனாய்வு பிரதானி மற்றும் ஏனைய அதிகாரிகள் முன்னெடுத்த நடவடிக்கைகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் ஓய்வுபெற்ற நீதியரசர் ஏ.என்.டி.அல்விஸ் தலைமையிலான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.
இந்தக் குழு, இந்தியப்புலனாய்வுத்துறையிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்கள், வவுணதீவு கொலை விவகாரத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினர் தொடர்புபட்டிருந்தாக இராணுவ புலனாய்வுச் சபையால் அறிவிக்கப்பட்டமை தொடர்பிலும் விசாரணை நடத்தவுள்ளது.
இந்தக் குழுவின் அறிக்கையை செப்ரெம்பர் 15ஆம் திகதிக்கு முன்னதாக பெற்றுத்தருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றுள்ளது. (அ-ஒ-இ)

# ஓகஸ்ட் மாதத்தில் இலங்கையில் மோடி

கொழும்பு, மே 13
இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இலங்கைக்கு வரவுள்ளார் என்று ஜனாதிபதியின் ஆலோசகரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஆசுமாரசிங்க தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
"இந்தியப் பிரதமரின் பதவியேற்பு நிகழ்வில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியா சென்றிருந்தார். இந்தியா என்பது எமது பெரிய அண்ணன். எனவே, அந்த நாட்டுடன் நெருக்கமான உறவைப் பேணவேண்டியது அவசியம். இந்தியப் பிரதமர் விரைவில் இலங்கை வரவுள்ளார். திகதி விவரம் இன்னும் உறுதியாகவில்லை. ஓகஸ்ட் மாதமளவில் வருவார் என எதிர்பார்க்கின்றோம்.
ஏனைய அயல் நாடுகளைவிடவும் இலங்கை தொடர்பில் இந்தியா கூடுதல் கரிசனையை கொண்டுள்ளது. ஜனாதிபதி ரணிலுக்கு வழங்கப்பட்ட பிரமாண்ட வரவேற்பும், மோடியின் அணுகுமுறையும் இதற்கு சான்றாகும். இலங்கையின் அடுத்த ஜனாதிபதி ரணில்தான் என்பது பிரதமர் மோடிக்கும் தெரிந்துள்ளது" - என்றார். (அ-ம-44)

## சிறுமி மீதான தாக்குதல்:
# அம்பலப்படுத்தியவருக்கு ரூபா 5 லட்சம் பரிசு

வெலிஓயாவில் சிறுமி ஒருவர் மீது கடுமையாக தாக்குதல் நடத்திய காணொலியை சமூக வலைத்தளத்தில் தரவேற்றியவருக்கு பொலிஸாரால் 5 இலட்சம் ரூபா பணம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. (ஒ-இ)


## பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவனை 1968 ஆம் ஆண்டு பிறப்பிடமாகக் கொண்ட **நவரத்தினம் நாகராணி** ஆகிய நான் எனது பெயரை இன்று தொடக்கம் **நௌசாத் நபீஸா** என மாற்றம் செய்துள்ளேன் என்பதனையும் இனிவரும் காலங்களில் அனைத்து ஆவணங்களிலும் **நௌசாத் நபீஷா** என கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசு மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

(CS 55348) A-1

**நௌசாத் நபீஸா**

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 25 . 04 . 1940
மறைவு 27 . 05 . 2023

**அமரர் நடராசா கதிரவேலு (தம்பு)**
**திதி: பூர்வ பட்ஷ ஸப்தமி**

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

79, காரைக்காட்டு வீதி,
வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.
077 610 5132

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்.

(CS/55358) J-1

## பெயர் மாற்றம்

கலாச்சார வீதி, மயிலங்காடு, ஏழாலை தெற்கில் வசிக்கும் **புஸ்பராசா ரஞ்சினிமலர்** ஆகிய நான் எனது முதற்பெயரை **ரஞ்சிதமலர்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **புஸ்பராசா ரஞ்சிதமலர்** என்றே கையொப்பமிடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**புஸ்பராசா ரஞ்சிதமலர்**

(CS 55349) A-1

## பெயர் மாற்றம்

53, 1ம் குறுக்கு, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் **பத்மாவதி** ஆகிய நான் எனது பெயரை **பற்றிமா** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **பற்றிமா** என்றே கையொப்பமிடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(CS/55354) J-1

**பற்றிமா**

## பனங்காமம் பற்று பல நோக்கு கூட்டுறவுச்சங்கம் (வ.து)
## வவுனிக்குளம்
## பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பம் கோரல்

பாண்டியன்குளம் பிரதேச செயலாளர் பிரிவின் பனங்காமம் பற்று பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் வெற்றிடமாக கீழ்வரும் பதவிக்கான தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக்குறிப்பிட்டு தங்களது சுயவிபரம். பிறப்புச்சான்றிதழ். கல்வித்தகைமைச் சான்றிதழ்கள். சேவைத்தகைமைச் சான்றிதழ்கள் ஆகியவற்றின் நிழற்பிரதிகளுடன் விண்ணப்பத்தினை **தலைவர், பனங்காமம் பற்று பல நோக்கு கூட்டுறவுச்சங்கம்** எனும் முகவரிக்கு 01.07.2024 ம் திகதி திங்கட்கிழமை 12.00மணிக்கு முன்னராக நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பிவைக்கவும்.

**பதவி- கிராமியவங்கி முகாமையாளர்**
**சம்பளக்குறியீட்டு இலக்கம்-205/11 -01**
**சம்பள அளவுத்திட்டம்:-**

அ) கூட்டுறவு ஊழியர் 12 ஆவது சம்பளத்திட்ட பதவியில் கிராமிய வங்கிப் பிரிவு பதவியொன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/
கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத்திட்ட பதவியில் கிராமிய வங்கிப்பிரிவு பதவியொன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனமொன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனமொன்றில் எழுதுநர் பதவியில் ஆகக்குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்/

க.பொ.உயர்தரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனமொன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகம் / கைத்தொழில் நிறுவனமொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்.

**குறிப்பு:-**

- வயதெல்லை 18 தொடக்கம் 45 வரை
- முல்லைத்தீவு மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்கள் விண்ணப்பிக்கமுடியும்
- சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
- வேறு கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பிப்பவர்கள் தாங்கள் கடமையாற்றும் சங்கம் ஊடாக விண்ணப்பிக்கவேண்டும்.
- எவரேனும் ஒருவர் கூட்டுறவுச்சங்கத்தில்சேவையாற்றுகின்ற அதே வேளையில் நேரடியாக விண்ணப்பத்தினைச் சமர்ப்பித்துள்ளார் எனின் அவர் தெரிவு செய்யப்பட்டதன் பின்னரேனும் தெரியவருமாயின் பதவி இழப்பதற்கு அது ஒரு காரணமாக அமையும்.
- கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்று நிருபங்கள் 04/2017(I).04/2018(01) இற்கு அமைய வாழ்கைச்செலவுப் படியும் விசேட செயலாற்றுகைப் படியும் வழங்கப்படும்.
- இப்பதவிக்கு விண்ணப்பங்கள் செய்யும் விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படுமிடத்து சங்கத்தில் பிணைப்பணம் செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும்.

**தலைவர்**
**பனங்காமம் பற்று பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்**
**பாண்டியன்குளம்.**

(CS 55353) A-1

# வைத்திய சேவை

நோயாளிகளை, வயோதிபர்களை வைத்தியசாலையில் அல்லது வீடுகளில் தங்கி நின்று பார்வையிட அனுபவமானவர்கள் தேவையா?.....
வீட்டில் இருக்கும் வயோதிபர் அல்லது நோயாளர்களுக்கு குறிப்பிட்ட நேரத்திற்கு வீடுகளிலேயே **Pampus, Cathedral, Blood change, Insulin injection** போன்ற சேவைகளை தமது வசதிக்கேற்ப பெற்றுக்கொள்ள.....
எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**மேலதிக தகவல் அறிய இந்த இலக்கத்தை தொடர்பு கொள்ளவும்**

**075 047 5195, 077 195 3931**

(CS 55352) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மானிப்பாய் மகளிர் சதுரங்கத்தில் சாதனை

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைக ளுக்கு இடையிலான 17 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான சதுரங்கப் போட்டியில் முதலாம் இடம்பெற்று மானிப்பாய் மக ளிர் கல்லூரி அணி சம்பியன் பட்டத்தைத் தனதாக்கியுள்ளது.

இரண்டாமிடத்தை மகாஜனக் கல்லூரி யும், மூன்றாம் இடத்தை ஸ்கந்தவரோத யக் கல்லூரியும், நான்காம் இடத்தை இளவாலை கன்னியர்மடம் மகா வித்தி யாலய மும் பெற்றுக்கொண்டன. (ச-555)

## ராஜபக்சக்கள் இல்லாத கூட்டணி

எதிர்வரும் தேர்தலில் ஜனாதிபதிக்கு ஆதரவ ளிக்கும் வகையில் 'ராஜபக்ச குடும்ப அரசியல்' இல்லாத ஒரு புதிய அரசியல் கூட்டணியை உருவாக்குவது தொடர்பில் கடந்த 9ஆம் திகதி அரசாங்க, எதிர்க்கட்சி மற்றும் அரசியல் கட்சி களுக்கிடையில் விசேட கலந்துரையாடல் ஒன்று கொழும்பில் நடந்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் சமகி ஜன பலவேக ஆகிய கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் இந்தக் கலந்துரையாடலில் பங்கு கொண்டனர் என்று கூறப்பட்டு கின்றது. பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் 60க்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கூட்டணி யில் இணைவார்கள் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஏ-இ)

## அனலைதீவு மீனவர்கள் இந்தியக் கடலில் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 13

இந்திய கடற்பரப்பில் தத்தளித்துக் கொண்டிருந்த அனலைதீவு மீனவர்கள் இருவர் இந்திய மீனவர்களால் காப்பாற் றப்பட்டு கரைசேர்க்கப்பட்டுள்ளனர்.

அனலைதீவுப் பகுதியில் இருந்து கடந்த 10ஆம் திகதி மாலை கடற்றொழிலுக்கு சென்றிருந்த நிலையில் காணாமற்போ யிருந்த அனலைதீவைச் சேர்ந்த திருச் செல்வம் மைக்கல் பெனாண்டோ, நாக லிங்கம் விஜயகுமார் என்ற இருவருமே இந்திய கடற்பரப்பில் வைத்து மீட்கப்பட் டுள்ளனர்.

இயந்திரப் பழுது காரணமாக இந்திய கடற்பரப்புக்குள் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் குறித்த மீனவர்கள் நாகபட்டி னம் மீனவர்களால் காப்பாற்றப்பட்டுள்ள னர். அவர்கள் தமிழக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ம-100)

## சிறுமி கர்ப்பம்! இளைஞர் கைது

முல்லைத்தீவு, ஜூன் 13

முல்லைத்தீவு - பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 15 வயதுச் சிறுமியை வன்பு ணர்ந்த சந்தேகத்தில் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பாடசாலை மாணவியான அந்தச் சிறு மியை காதலித்து, வீட்டை விட்டு அழைத் துச் சென்று அவருடன் குடும்பமாக வாழ்ந்துவந்த நிலையிலேயே அந்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று பொலி ஸார் தெரிவித்துள்ளனர். (ம-19)

## நெருக்கடியில் தபால்துறை பணியாளர்கள் போராட்டம்

கொழும்பு, ஜூன் 13

தபால் சேவையில் நிலவும் ஊழியர் வெற் றிடங்களை நிரப்புமாறு கோரி தபால் ஊழியர்களால் பணிப்புறக்கணிப்பு முன் னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று நள்ளிரவு முதல் இன்று 13 ஆம் திகதி நள்ளிரவு 12மணிவரை இந்த தொழிற்சங்க நடவடிக்கையில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் நாடு முழுவதும் உள்ள அனைத்து தபால் நிலையங்களும் இன்று திறக்கப்பட மாட்டாது எனதபால் தொழிற்சங்க முன் னணி அறிவித் துள்ளது.

அஞ்சல் துறை தற் போது பெரும் நெருக்கடியைச் சந் தித்துள்ளது. சுமார் 2,000 பணியாளர் கள் பற்றாக்குறை நிலவுவதால், 4 ஆண்டுகளாக பதவி உயர்வு மற்றும் ஆட்சேர்ப்பு இடம் பெறவில்லை என்றும் ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணி குறிப் பிட்டுள்ளது. (ச-இ)


**வேலையாட்கள் தேவை**

பழக்கடை ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.

தொடர்புகளுக்கு:

077 036 6388

(CS 55359) V-1

**வேலையாட்கள் தேவை**

அச்சுவேலியில் அமைந்துள்ள பேக்கரி ஒன்றிற்கு கேக் ஐசிங் தெரிந்த ஆண், பெண் வேலையாட்கள் தேவைப்படுகின்றனர்.

அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

(28136 B) J-1 வயது எல்லை 18 - 40

தொடர்பு:- 077 445 8502

**வேலையாட்கள் தேவை**

நெல்லியடியில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவைப்படுகின்றனர்.

வயது எல்லை 18 - 40


ஆர்வம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:- 077 445 8502

(28136) J-1



**கண்ணீர் அஞ்சலி**



தோற்றம் 16.07.1943 மறைவு 11.06.2024

**சிவயோகநாதன் லோகேஸ்வரி**

அவர்களுக்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

எமது ஆலயத்தின் பஞ்ச கர்த்தா உறுப்பினர் ஆகிய **திரு. சிவபாலன்** அவர்களின் அன்புத் தாயாரின் இறப்புச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையும், அதிர்ச்சியும் அடைகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கலட்டி எச்சாட்டி மஹாமாரி அம்மன் பாதாரவிந்தங்களைப் பணிந்து வேண்டி நிற்கின்றோம்.

**பிரிவால் துயருறும் கலட்டி எச்சாட்டி மஹாமாரியம்மன் தேவஸ்தான நிர்வாக சபையினர், மற்றும் இளைஞர்கழகத்தினர்**

(CS 734)S-1



THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

**சாரதிகளுக்கான பதவி வெற்றிடங்கள்**

ஹலோ ட்ரஸ்ட் நிறுவனமானது ஐக்கிய ராச்சியத்தைத் தளமாகக் கொண்ட உலகின் மிகப்பெரிய சர்வதேச மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் அரசசார்பற்ற நிறுவனமாகும் உலகளாவியரீதியில் 30 ஆண்டுகளுக்கு மேலாக நாங்கள் உயிரைக் காப்பாற்றி வருகிறோம். போரினால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் நிலத்தைப் பாதுகாப்பாக மீட்டெடுக்க உதவுகிறோம். மோதலில் பாதிக்கப்பட்டவர்களின் உயிர்களைப் பாதுகாப்பதும் வாழ்வாதாரத்தை மீட்டெடுப்பதும் எங்கள் நோக்கம்.

ஹலோ ட்ரஸ்ட் நிறுவனமானது சாரதிகளுக்கான விண்ணப்பங்களைக் கோருகின்றது. இப்பதவியின் அத்தியாவசிய சேவைகளாவன, பணிப்பகுதிகளுக்கு அணிகளை கொண்டு செல்வதற்கும் விபத்தொன்றின் போது அம்புலன்ஸ் சேவை வழங்குவதுமாகும்.

**பதவி : சாரதி**

**சம்பளம் 48,050.00 (after tax, EPF, and ETF)**

இடம்: கிளிநொச்சி, கொக்குத்தொடுவாய்

அறிக்கையிடல்: வாகனப்பகுதி முகாமையாளர், உதவி வாகனப்பகுதி முகாமையாளர்,

**வேலைச் சுழற்சி: நடவடிக்கை (Ops)**

சாரதியின் கடமைகளாவன

- ஹலோ பணியாளர்கள், கருவிகள் மற்றும் பொருட்களை குறிப்பிட்ட இடங்களு க்கு சரியான நேரத்தில் பாதுகாப்பாக கொண்டு செல்வது.
- ஏதேனும் ஏற்றுதல் அல்லது இறக்குதல் கடமைகளை மேற்கொள்வதற்கு முன் முகவரிகள் மற்றும் பிற போக்குவரத்து விபரங்கள் சரியானவையா என்பதை உறுதி செய்தல்.
- பணியாளர்களின் கருவிகள் மற்றும் பொருட்களை ஏற்றி இறக்குவதற்கு உதவுதல்.
- போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க மாற்று வழிகளைப் பயன்படுத்துதல்.
- ஹலோ வாகனங்களை எப்போதும் அனுமதிக்கப்பட்ட வாகனத் தரிப்பிடங்களில் நிறுத்துதல்.
- வாகனங்களை நாளாந்தம் துப்பரவு செய்தல் , கழுவுதல் மற்றும் பராமரித்தல்.
- முதல் வாகன அணிவகுப்புச் சோதனை மற்றும் ஹலோ வாகனங்களின் வழக்கமான சோதனைகளைச் செய்தல்.
- வாகனக் காப்புறுதி மற்றும் வரிகள் உட்பட சட்ட ரீதியான ஆவணங்கள் புதுப்பி க்கப்பட்ட நிலையில் இருப்பதை உறுதி செய்தல்.
- வாகனப்பதிவுப் புத்தகத்தை பராமரித்தல் , கிலோ மீற்றர் போய் வந்த இடங்கள் இறுதி இடங்கள் மற்றும் எரிபொருள் வழங்கல், பயன்பாடு மற்றும் நுகர்வு உட்பட வேலை நேரத்தை பதிவு செய்தல்.
- ஹலோ வாகனத்தில் போய் வரும் சரியான நேரத்தினைப் பதிவு செய்து வழங்குதல்.
- ஏதேனும் விபத்துக்கள் காயங்கள் மற்றும் வாகன சேதங்கள் ஏற்படின் சரியான நேரத்திற்கு அலுவலகத்திற்கு அறிவித்தல்.

மேற்குறிப்பிட்ட பதவிநிலைக்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிபரக்கோவைகளை எதிர்வரும் 20 ஆனி 2024 வியாழக்கிழமைக்கு முன்னதாக கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ, நேரிலோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம்.

**மனிதவள முகாமையாளர்**
**த ஹலோ ட்ரஸ்ட் - இலங்கை**
**450, திருநகர் மேற்கு ,கிளிநொச்சி.**

(CR/42641) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13இனை முற்றாக தந்தே தீருவேன்!

## விக்னேஸ்வரனிடம் சொன்னாராம் சஜித்

யாழ்ப்பாணம், ஜுன் 13

13ஆவது திருத்தச்சட்டத்தை நிச்சயமாக நிறைவேற்றியே தீருவேன் என்று சஜித் தன்னிடம் தெரிவித்ததாக, நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சஜித் மற்றும் விக்னேஸ்வரன் இடையில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் பின்னர், ஊடகங்களிடம் விக்னேஸ்வரன் தெரிவித்ததாவது:-

13ஆவது திருத்தத்தை முற்றாக நடைமுறைப்படுத்துவேன் என்று தெரிவித்தமையைக் கண்டித்து கொழும்பில் நாளை (இன்று) தனது அலுவலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப் படவுள்ளது என்றபோதும் தனது கொள்கையில் தான் உறுதியாக இருப்பதாகவும், 13ஆவது திருத்தத்தை நிச்சயம் தந்தேதீருவேன் என்றும் சஜித் தெரிவித்தார்.

"13ஆவது திருத்தம் என்பது 1987ஆம் ஆண்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வாக இந்தியாவால் தற்காலிகமாக ஏற்படுத்தப் பட்ட விடயம். அது தமிழ் மக்களுடைய பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய ஒன்றல்ல. தற்காலிகமாக அதனை பாவிக்கலாம். சில நன்மைகளை அதன் மூலம் பெறலாம்" என்று நான் சஜித்திடம் சுட்டிக் காட்டினேன்.

மாகாணசபையை தற்போதுள்ள அரசாங்கம் செயலிழக்கச் செய்துள்ளது. அவ்வாறான நிலை எனது ஆட்சிக் காலத்தில் ஏற்படாது. மாகாண சபையை நான் வலுவாக நடைமுறைப்படுத்துவேன் என்றும், தனது காலத்தில் மாகாண சபை முறையைப் பலப்படுத்துவேன் என்றும் சஜித் இதன்போது தெரிவித்தார் - என்றார் விக்கேஸ்வரன்.

(ம-125)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## இராமு நவரட்ணம்



தோற்றம் 19.09.1947
மறைவு 26.05.2023

ஓராண்டு கடந்து விட்டது
எம்மை விட்டு நீங்கள் பிரிந்து
தீராத பெருந்துயரில் தேம்புகின்றோம்
நாம் இங்கு !

உறவுகளை தவிக்கவிட்டு
நிம்மதியாய் உறங்கிவிட்டீர்
எம்மை யெல்லாம் அழவிட்டு
இறைவனை நாடிச் சென்றீர்

உங்களை எண்ணி தினம் தினம்
மனம் வெதும்புகின்றோம்!
உமது இல்லம் வெறித்துவிட்டது
நீரின்றி !


நீங்கள் மறைந்த நாள் முதலாய்
நிம்மதி எமக்கு இல்லை
நினைவிழந்து செயலிழந்து
நிர்க்கதியாய் நிற்கின்றோம்
கண்முன்னே கலங்கரை விளக்காய்
வழிகாட்டி நிற்கின்றீர்கள்

மண்விட்டு நீங்கள் மறைந்தாலும்
எம் மனதில் என்றும் பசுமையாய்
உங்கள் நினைவுகளுடன் நாம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, உறவுகள்

இல.283/46, முடவேம்படி,
சுன்னாகம் வடக்கு, சுன்னாகம்.

# மரண அறிவித்தல்



தோற்றம் 16 . 07 . 1943
மறைவு 11 . 06 . 2024

## சிவலோகநாதன் லோகேஸ்வரி (சின்னக்கிளி)

யாழ்ப்பாணம் பிறவுண் வீதியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சிவலோகநாதன் லோகேஸ்வரி நேற்று (11.06.2024) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம்-அன்னலட்சுமி (பரியாரியார்) தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சரவணமுத்து- சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவலோகநாதனின் அன்பு மனைவியும். சுகன்யா (சுதா-பிரான்ஸ்), சிவகுமார் (பிரான்ஸ்), சிவபாலன் (பாலன்-யாழ். மாநகர சபை), குகப்பிரியா (குகா-பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சரவணபவன் (பிரான்ஸ்), பாரதி (பிரான்ஸ்), சாந்தநாயகி, திலீபநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஸ்ரீபன் (சதிஸ்-பிரியா), சில்வன் சந்துரு, சஞ்சீவ் சுந்தர், ஹரிஸ், பானு, சரண், சிவரூபன், கௌதமன், ஜனுக்சன், லூட்சிகா, சுவிந்தன், இந்துஜன் ஆகியோரின் பேர்த்தியும் அயனின் பூட்டியும் காலஞ்சென்றவர்களான கௌரி (பெரியகிளி), லோகேந்திரராசா ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற அம்பலவாணரின் உடன்பிறவா சகோதரியும் காலஞ்சென்ற பாலச்சந்திரன் (இந்திரன்), மற்றும் மதிவதனசோதி, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், திருமகளின் சிறியதாயும், ராமமூர்த்தி, காலஞ்சென்றவர்களான கோமதி, முகுந்தன் மற்றும் தயாளன், காலஞ்சென்ற கார்த்திகா மற்றும் மயூரன், அமுதினி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2024) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பிற்பகல் 1.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
சிவபாலன் 077 647 9124
சுகன்யா +33 62 656 3738
சிவகுமார் +33 62 582 3686
குகப்பிரியா +33 76 949 6537

185/4, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 07 . 06 . 1945
மறைவு 25 . 06 . 2023

## திருமதி றஞ்ஜிற் இராசலட்சுமி

(முன்னாள் முன்பள்ளி ஆசிரியர்)

மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கி சென்று
அகவை ஒன்று ஆனாலும்
உங்கள் அழியாத நினைவலைகள்
எம் அகத்தில் நின்று
வாட்டி வதைக்கின்றன தாயே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

ஆலங்குழாய்
[illegible]ப்பாய்.

குடும்பத்தினர்

(CS/55345) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## மானிப்பாய்...

முதன்முறையாக இந்த வருடம் இந்தத் துடுப்பாட்டச் சமர் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
இருநாள்களிலும் 90 ஓவர்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியாக இந்தச் சமர் இடம்பெற்று தொடர்ச்சியாக 16 ஆம் திகதி பழைய மாணவர்களுக்கிடையிலே ஒருநாள் சுற்றுப்போட்டி இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ச-125)

## இலங்கை...

ஆசிரியர் சங்கத்தினர் நாடளாவிய ரீதியில் நேற்றுத் தீவிர போராட்டத்தில் ஈடுபட்டனர்.
வவுனியா பேருந்து நிலையம், மன்னார் வலயக் கல்விப் பணிமனை, யாழ்ப்பாண கல்வி வலயம், வடமராட்சி, தென்மராட்சி உள்ளிட்ட பல பகுதிகளிலும் அதிபர், ஆசிரியர்களின் ஆர்ப்பாட்டம் தொடர்ந்தது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் பரீட்சைக் கடமையில் ஈடுபட்டுவரும் ஆசிரியர்களும் பிற்பகல் 1.30 மணியளவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
இலவசக் கல்வியை தனியார் மயப்படுத்தாதே, மாணவர்களின் கல்வி உரிமையில் கை வைக்காதே, மாணவர்களின் போஷாக்கு நிலையை உறுதிப்படுத்து, அரசே அதிபர், ஆசிரியர்களின் எஞ்சிய மூன்றில் இரண்டு பங்கு சம்பளத்தை வழங்கு, அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாட்டை நீக்கு ஆகிய வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு அதிபர்களும் ஆசிரியர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.
(அ-ம-66-159-56-60-100-213)

## சிறுமி...

தொடர்பில் முள்ளியவளைப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டிருந்த நிலையில், கடந்தவாரம் கேப்பாபிலவைச்சேர்ந்த 30 வயதுடைய நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.
இதனையடுத்து, மாணவியின் வாய் முறைப்பாட்டில் இருந்து பெற்றுக் கொண்ட தகவலுக்கமைய, நேற்று முன்தினம் 16, 17 மற்றும் 19 வயதுடைய மூன்று இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் இவர்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது, கேப்பாபிலவைச் சேர்ந்த 16 வயதுடைய சிறுவன் உயிர்கொல்லி ஐஸ் போதைப்பொருள் பாவித்துள்ளமை தெரியவந்துள்ளது.
சிறுமியிடம் மேற்கொண்ட விசாரணைகள் மூலம் கடந்த 2022 ஆம் ஆண்டுதொடக்கம் குறித்த நபர்கள் சிறுமியுடன் உறவில் இருந்துள்ளமை தெரியவந்துள்ளது.
கைதுசெய்யப்பட்ட பாடசாலைச் சிறுவன் உள்ளிட்ட மூவரும் நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது அதில் இருவரை விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டுள்ளதுடன் 16 வயதுடைய பாடசாலைச் சிறுவனை யாழ்ப்பாணம் அச்சுவேலியில் உள்ள சிறுவர் நன்நடத்தை இல்லத்துக்கு அனுப்பிவைக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.
(அ-ஒ-19)

## டிப்பருடன்...

உயிரிழந்தவரின் சடலம் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. டிப்பர் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ள நிலையில், சாவகச்சேரிப் பொலிஸார் விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-27-159-9-66)

## சகல...

3 மாணவர்கள் மருத்துவத்துக்கும், 2 மாணவர்கள் பொறியியல் பீடத்துக்கும், 5 மாணவர்கள் முகாமைத்துவ பீடத்துக்கும் தெரிவாகியுள்ளனர். அனைவருக்கும் எனது வாழ்த்துக்கள்.
விக்ரோரியாக் கல்லூரிக்கான பேருந்து நான் வழங்கிய 88 ஆவது பேருந்தாக உள்ளது. இலவசக் கல்வியை வளர்ச்சியடையச் செய்ய இது முக்கியமான காரணமாக உள்ளது. சிலர் எனது இந்தத் திட்டத்தைக் கடுமையாக எதிர்க்கின்றார்கள். ஏனென்றால் அவர்களால் இதைச் செயற்படுத்தமுடியாது. இலங்கை வரலாற்றில் எதிர்கட்சியால் நாடு அபிவிருத்தி செய்யபட்டமை எமது காலத்திலேயே ஆகும். நாட்டிலுள்ள 10 ஆயிரத்து 906 பாடசாலைகளுக்கும் எனது ஆட்சியில் இலவச உணவை வழங்குவேன் - என்றார். (அ-ம-125)

## மகப்பேற்று...

தொலைபேசியில் வழங்கிய தகவலையடுத்துப் பருத்தித்துறை ஆதார மருத்துவமனை நிர்வாகத்தினர் மருத்துவமனையின் விடுதிக் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்த போது மருத்துவர் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.
உயிரிழப்புக்கான சரியான காரணம் உடனடியாகத் தெரியவராத நிலையில் சடலம் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-66-100)

## சஜித்...

பிற்பகல் 2 மணியளவில் இந்த நிகழ்வு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் தாமதமாகவே நிகழ்வுக்கு சஜித் வந்தார். இதனால் மாணவர்கள் கால்கடுக்க சஜித்தின் வருகைக்காகக் காத்திருந்தனர். (அ-ம-27)

## சேவை நலன் பாராட்டு

**திரு பாலசுப்பிரமணியம் சுபாஷன்**

"எமது கிராமத்தின் முன்னாள் கிராம உத்தியோகத்தர்"

சேவைக்காலம்:
16.02.2016-03.04.2024



"அறிவும் ஆற்றலும் ஆறாமைத்திறனும்
நறியவே நாளும் தழைக்கும் பண்பும்
அறிவால் ஆராய்ந்து அரும்பணி செய்தீர்
நெறியோர் வாழ்த்த நீடூழி வாழ்க

Congratulations

Best Wishes

வாழ்த்துபவர்
தம்பிஜயா.பாலசுப்பிரமணியம்
டாக்டர் பிலிப்ஸ் வீதி
சந்திரபுரம் மட்டுவில்

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 08.09.1981 | இறப்பு 21.05.2018

**அமரர் கனகசபாபதி கௌரிதரன்**

அன்பினிலே மிகுந்தவராய் பண்பினிலே சிறந்தவராய்
மண்ணிலே உதித்து அமைவுற்ற வாழ்வினில்
நறுமணம் பரப்பி இல்லத்தில் விருட்சமாய்
பாசநிழல் தந்தையாய்
உறவுகள் பேணிடும் கருணை வடிவமாய்
உரிமையாய் உணர்வை அன்பாய் பகிர்ந்தே
விண்ணக வாழ்வை நாடியே சென்றீர்கள்
ஆறு ஆண்டுகள் பறந்தோடிச் சென்றிருந்தாலும்
என்றென்றும் உங்கள் பாதம் போற்றியே
வாழ்ந்திடுவோம்.

ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.

என்றும் [illegible]
தாய், தந்தை, சகோதரர்கள், பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 20 . 11 . 1942



மறைவு 12 . 06 . 2024

**மார்க்கண்டு சிவசுப்பிரமணியம்**
**(இளைப்பாறிய ஆசிரியர்)**

நாவலர் ஒழுங்கையின் ஆசிரிய அடையாளமாகவும் அன்போடும்
பண்போடும் உரையாடும் அயலவராகவும்
ஞானவைரவரின் பண்ணிசைத் தொண்டராகவும் அரவணைக்கும்
தந்தையாகவும் அறிவுசார் ஆலோசகராகவும்
வாழ்வாங்கு வாழ்ந்த எங்கள் அன்பு ஆசானை (மாஸ்ரர்)
இழந்து தவிக்கின்றோம்.

**அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஞானவைரவரை பிரார்த்திக்கின்றோம்**

நாவலர் ஒழுங்கை
ஆனைப்பந்தி

அயலவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்...

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவாரா, இல்லையா என்பதை ரணில் பகிரங்கமாக வெளிப்படுத்தாத நிலையில், பத்தரமுல்லயில் வைத்து அவர் விடுத்துள்ள இந்த அறிவிப்புகள், 'தேர்தல் பரப்புரையின் ஆரம்பமாகவே' பார்க்கப்படுகின்றது.

இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் பொருளாதார ரீதியான வங்குரோத்து நிலை தொடர்பில் பலரும் பேசுகிறார்கள். அதனை நான் ஏற்றுகொள்ளப்போவதில்லை. இந்த நாடு பொருளாதார ரீதியாக மாத்திரமன்றி அரசியல் ரீதியாகவும் வங்குரோத்தடைந்துள்ளது என்பதே உண்மையாகும். இவை இரண்டும் பிரித்துப் பார்க்கமுடியாத பிரச்சினைகளாகும்.

நாட்டில் சரியான பொருளாதார முறைமை இன்மையே அதற்குக் காரணமாகும். நாட்டில் இதுவரையிலும் இறக்குமதியை மையப்படுத்திய பொருளாதாரமே காணப்பட்டது. தேவையான அனைத்துப் பொருள்களையும் இறக்குமதி செய்தோம். அதற்குச் செலுத்தத் தேவையான பணமும் எம்மிடம் இருக்கவில்லை. அதற்கு மத்தியில் போருக்கும் செலவிடவேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஆனால் போருக்குப் பின்னர் துரிதமான பொருளாதார வளர்ச்சியை எட்டிப் பிடிப்பதற்கான வாய்ப்பு நாட்டுக்கு கிடைத்திருந்தது. போர் நிறைவடைந்து 15 வருடங்களான பின்பும் நாம் அந்த முன்னேற்றத்தை அடையமுடியவில்லை. நாம் பழைய முறைகளையே பின்பற்றினோம். பணம் இல்லாதவேளையில் கடன் பெற்றுக்கொண்டோம். அதனை மீளச் செலுத்த முடியாமற்போனது.

நாட்டின் வருமானத் தேவையைக் கருத்தில்கொண்டு 2015ஆம் ஆண்டு நான் பிரதமராக பதவிவகித்த காலத்தில் வரி அதிகரிப்புச் செய்யவேண்டியிருந்தது. 2019ஆம் ஆண்டில் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வரிகளை குறைத்தார். அதனால் நாட்டின் வருமானம் குறைந்தது.

அந்த நேரத்தில் கொவிட் தொற்றும் பரவியது. நாட்டுக்கு 3 பில்லியன் டொலர் வெளிநாட்டு கையிருப்பு தேவைப்பட்டது. இருப்பினும் நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் ஒருவரும் அது பற்றி பேசவில்லை.

உலகின் வேறு எந்தவொரு நாட்டிலும் ஓர் ஆசனத்தை வென்று நாடாளுமன்றத்துக்கு தெரிவானவர்கள் பிரதமர் அல்லது ஜனாதிபதியாக பதவியேற்றதில்லை. ஆனால் இலங்கையில் அது நடந்தது. நாட்டின் அரசியல் வங்குரோத்து நிலையே அதற்குக் காரணமாகும். நாட்டை பொறுப்பேற்றுக்கொண்டு பிரச்சினைகளைத் தீர்க்க எவரும் முன்வரவில்லை. அதனால் நான் ஜனாதிபதி பதவியை ஏற்றுக்கொண்டேன் - என்றார்.

இந்தச் சந்திப்பில் இளைஞர் ஒருவரால், நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த போது, அந்தச் சவாலை ஏற்று வெற்றிகரமாக அதனை எதிர்கொண்டீர்கள். ஆனால், எவ்வாறேனும் அடுத்த தேர்தலில் நீங்கள் தோல்வி அடைந்தால், தற்போதைய திட்டத்தை தொடர யாராவது தலைமை தாங்குவார்களா? என்ற கேள்வி முன்வைக்கப்பட்டது.

அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி ரணில், இந்தத் தேர்தலில் தீர்மானிக்கப்படுவது எனது வெற்றி தோல்வி அல்ல. நாடு தோற்கடிக்கப்படுமா? இல்லையா? என்பதே தீர்மானிக்கப்படும். தற்போது சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி பொருளாதார வேலைத்திட்டத்தை முன்வைத்துள்ளோம். அதை நடைமுறைப்படுத்தவே பொருளாதார மாற்ற சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. அது சரிந்தால் மீண்டும் அந்நியச் செலாவணியை நாம் இழக்கநேரிடும். மீண்டும் மருந்து, பெற்றோல், எரிபொருள் இல்லாமல் வரிசையில் நிற்க வேண்டியேற்படும். எனவே, அரசாங்கத்தின் வேலைத் திட்டத்தை முன்னெடுப்பதா இல்லையா என்பதை தீர்மானிக்கவேண்டும்.

அனைத்துக் கட்சித் தலைவர்களும் இந்தப் பொருளாதார மாற்ற சட்டத்தை ஆதரிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு இல்லையெனில், ஒரு மாற்றுவழியை முன்வைக்கவும். இந்தத் தேர்தலில் தனி நபரை அன்றி, பொறிமுறையையே தெரிவு செய்ய வேண்டும். இந்த முறை தொடர வேண்டும் என்பதில் நீங்கள் திருப்தி அடைந்தால், இந்த முறையுடன் முன்னோக்கிச் செல்லலாம். அவ்வாறின்றி மீண்டும் வீழ்ச்சியடைந்த பொருளாதாரம், அந்நியச் செலாவணி இல்லாத, மருந்து, உரம் இல்லாத நாடு வேண்டுமானால் இன்னொரு தரப்பினரைத் தேர்ந்தெடுக்கலாம். நீங்கள் ஒரு நாடாக முன்னோக்கிச் செல்ல விரும்பினால், நீங்கள் அரசாங்க வேலைத் திட்டத்துடன் முன்னோக்கிச் செல்லலாம்.

அரசாங்கத்தின் வேலைத்திட்டம் சரியில்லைஎன்றால் அதற்கு மாற்றுவழியை முன்வைக்கவேண்டும். ஆனால் இது வரையில் அவ்வாறான மாற்றுத் திட்டத்தை யாரும் முன்வைக்கவில்லை. சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்தாலோசித்து ஒப்பந்தம் திருத்தப்படும் என்று சிலர் கூறுகின்றனர். ஒப்பந்தத்தை மாற்றமுடியாது என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. அடுத்த மாதம் நாடு வங்குரோத்து நிலையில் இருந்து விடுபடுவதற்கு என்னால் கையெழுத்திடாமல் இருக்கமுடியுமா? அதனால், உங்கள் எதிர்காலத்தைப் பற்றி நீங்கள் சிந்தித்து முடிவெடுக்க வேண்டும் - என்றார். (அ-ஒ-இ)

## நினைவேந்தல்...

கையளிக்கப்பட்டுள்ளது. மூத்த பேராசிரியர் ஜகத் வீரசிங்க, கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகப் பேராசிரியர் சந்திரகுப்த தேனுவர, யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் டி.சனாதனன், கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் பர்ஸானா ஹனீபா, தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் துஷாரி சூரியாராச்சி, நகர அபிவிருத்தி அதிகார சபையின் மேலதிகப் பணிப்பாளர் நாயகம் மஹிந்த விதானாச்சி ஆகியோர் உள்ளடங்கிய குழுவொன்று இது தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இந்தக் குழு நியமிக்கப்பட்டது.

1983 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் இலங்கையில் நடந்த ஆயுத மோதல்கள், அரசியல் அமைதியின்மை அல்லது உள்நாட்டுக் கலவரங்கள் என்பவற்றால் உயிரிழந்த பொதுமக்கள், ஆயுதப்படை உறுப்பினர்கள், பொலிஸார், முன்னாள் போராளிகள் உட்பட அனைவரையும் நினைவுகூரும் வகையில் ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்தின் அடையாளமாக நினைவிடமொன்றை அமைப்பது குறித்து இந்தக் குழு ஆய்வு செய்தது.

இதற்காக, நிபுணர் குழு கடந்த நாள்களில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் பொதுமக்களின் கருத்துகளைப் பெறும் அமர்வுகளை நடத்தியதுடன், ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் தொடர்பான நிபுணர்களுடன் ஆலோசனைகளையும் நடத்தியது.

இந்தப் பொதுமக்கள் அமர்வுகள் அந்தந்தப் பகுதிகளில் பணியாற்றும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகத்தின் தேசிய ஒருங்கிணைப்பு அதிகாரிகளால் ஒருங்கிணைக்கப்பட்டன. பங்குபற்றிய மக்களுக்கு தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் நல்லிணக்கத்துக்கான தமது அபிலாஷைகள், யோசனைகள் மற்றும் முன்மொழிவுகளை வெளிப்படையாகவும் சுதந்திரமாகவும் முன்வைக்க வாய்ப்பு வழங்கப்பட்டது.

நினைவேந்தல் செய்வதற்கான மக்களின் உரிமை பாதுகாக்கப்படவேண்டும் என்று குழு வலியுறுத்தியதோடு பல்வேறு குழுக்களும் தனிநபர்களும் நினைவேந்தல் மற்றும் நல்லிணக்க நிகழ்வுகளை வெவ்வேறு வழிகளில் முன்னெடுப்பதையும் இந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. வளமான அறிவுக் கட்டமைப்பையே இது வெளிப்படுத்துவதாகச் சுட்டிக்காட்டியுள்ள நிபுணர் குழு, நாட்டின் மோதல்கள் தொடர்பான கடந்த காலத்தைப் பற்றி அறிக்கையிடவோ, கருத்துத் தெரிவிக்கவோ அல்லது வேறுவிதமாகக் கையாளும் முயற்சியின்போது இந்தப் பங்களிப்புகளைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் அறிக்கை தெளிவுபடுத்தியுள்ளது.

இந்தச் சந்திப்புகளின்போது முன்வைக்கப்பட்ட பரந்த அளவிலான யோசனைகளை பரிசீலித்த பின்னர் இந்தக் குழு பலபரிந்துரைகளை முன்வைத்துள்ளது.

இலங்கையின் மோதல்கள் மற்றும் நல்லிணக்க முயற்சிகளுடன் உருவான கலை மற்றும் கலாசார வெளிப்பாடுகளை பாதுகாத்து வைக்கும் குறியீட்டு ரீதியிலான கட்டடமொன்றை அமைக்கவும் குழு பரிந்துரைத்துள்ளது. (அ-ஒ-26)

## காற்றாலை...

மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பல்வேறு தரப்பினரால் எதிர்ப்புகள் முன்வைக்கப்பட்டன. எனினும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவால் எவ்வித அனுமதியும் வழங்கப்படாமல் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு எதிராக மக்களே நடவடிக்கை எடுக்கவேண்டும் என மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரனின் நெறிப்படுத்தலில் அபிவிருத்திக் குழுவின் தலைவரான இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், கு.திலீபன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். இதன் போது பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

மன்னார்த் தீவில் 2 ஆவது கட்டமாக முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு குறித்து கலந்துரையாடப்பட்ட போது பல்வேறு தரப்பினராலும் எதிர்ப்பு வெளியிடப்பட்டது. 'மன்னார் மாவட்ட பிரஜைகள் குழு, மீனவ அமைப்புகள் மற்றும் பொது அமைப்புகளின் ஒன்றியம் ஆகியவை எதிர்ப்பை வெளியிட்டன. மன்னார்த் தீவுக்குள் கனிய மணல் அகழ்வு அல்லது ஆராய்ச்சி நடவடிக்கைகள் இனி இடம்பெறக்கூடாது என பல முறை தெரிவிக்கப்பட்டபோதும், அகழ்வு தொடர்பாக அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் கடந்த அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின்போது காற்றாலை மின் செயற்றிட்டம் தொடர்பாக அரச தலைவர் ரணிலிடம் பேசுவதாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தபோதும் இதுவரை எவ்வித முயற்சிகளும் முன்னெடுக்கப்படவில்லை என விசனம் தெரிவிக்கப்பட்டது.

மன்னார்த் தீவில் கனியமணல் அகழ்வு முன்னெடுக்கப்படக்கூடாது என்பதே அனைவரினதும் கோரிக்கை. எனினும் கனியமணல் அகழ்வை முன்னெடுக்கும் நிறுவனத்தை அழைத்து கலந்துரையாடியமையை ஏற்றுக்கொள்ளமுடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

"இந்த விடயத்தை திரும்பத்திரும்ப கதைப்பதில் அர்த்தம் இல்லை. அதற்கான அனுமதியை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு வழங்காத நிலையில், கொழும்பில் அனுமதி வழங்குவதாக இருந்தால் இந்த மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதற்கு? அவ்வாறு கொழும்பில் அனைத்துக்கும் அனுமதி வழங்கினால் இனிமேல் மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை நடத்துவதில் அர்த்தம் இல்லை" எனவும் அவர் குறிப்பிட்டார். (அ-ஒ-56)

## மாற்றுத்...

அவ்வாறு நீக்க முற்பட்டால் அது வேறு பிரச்சினைக்கே வழிவகுக்கும் என்று தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் மூலம் கடந்த காலங்களில் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டுவந்துள்ளனர். இவ்வாறு தமிழ் மக்களை ஏமாற்றி அரசியல் நடத்துவதற்கு தேசிய மக்கள் சக்தி தயாரில்லை. எனவே, இந்த நாட்டை மாற்றுவதற்காக அனைத்து இன மக்களையும் அரவணைத்துக்கொண்டு புதியதொரு திசையை நோக்கி நகரவேண்டும்.

13 ஆவது திருத்தம் ஊடாக பிரச்சினைகள் தீரவில்லை. அது தோல்விகண்டதொரு பொறிமுறையாகும். நானும் மாகாணசபையில் அங்கம் வகித்துள்ளேன். தீர்வுக்குப் பதிலாக அதன்மூலம் நிர்வாகப் பொறிமுறையில் பிரச்சினைகள் வந்துள்ளன. 13 ஆவது திருத்தம் ஊடாக எதிர்பார்க்கப்பட்ட விடயங்கள் நிறைவேறாதபோதிலும், அது வெள்ளை யானையாகக் கருதப்பட்டாலும் தற்போது வடக்கு - கிழக்கு மக்கள் '13' என்பது தாம் வென்றெடுத்த உரிமையாகவே கருதுகின்றனர்.

எனவே, இதற்கு மாற்றுத் தீர்வை வழங்காமல் ஒரேடியாக 13ஆவது திருத்தத்தை நீக்கினால் அது வேறு பிரச்சினைக்கு வழிவகுக்கும். 13 ஆவது திருத்தச்சட்டம் தற்போதுள்ளவாறு அமுலாக்கப்படும். பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்ட பின்னர், அதனை குறுகிய காலப் பகுதிக்குள் செய்யமுடியும். புதிய அரசமைப்பு கொண்டுவரப்படும். அதன்மூலம் அனைத்து இன மக்களினதும் உரிமைகள் உறுதிப்படுத்தப்படும். அனைவரும் சம உரிமை பெற்ற சமூகமாக வாழமுடியும்" - என்றார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலவச குடிதண்ணீருக்கு பதிவுசெய்ய மீள வாய்ப்பு

முல்லைத்தீவு, ஜூன் 13

கரைதுறைப்பற்று பிரதேசசெயலகப் பிரிவுக்குட்பட்ட மாமூலை, கணுக்கேணி கிழக்கு, கணுக்கேணி மேற்கு கிராமங்களில் இதுவரை இலவச குடிதண்ணீர் இணைப்பைப் பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு, மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை அறிவித்துள்ளது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் வழங்கப்பட்ட இலவசகுடிதண்ணீர் இணைப்பை இதுவரை பெற்றுக்கொள்ளாதவர்கள் எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம். பதிவுகளுக்காக வரும்போது தேசிய அடையாள அட்டை, குடும்பப் பதிவு அட்டை மற்றும் காணி தொடர்பான ஆவணங்களுடன் வந்து பதிவு செய்யமுடியும் என்று தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப் புச்சபையின் முல்லைத்தீவு காரியாலயம் கோரியுள்ளது.

ஏற்கனவே பதிவுகளை மேற்கொண்டு இதுவரை குடிதண்ணீர் இணைப்பைப் பெற்றுக்கொள்ளாதவர்களும் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தங்களின் பதிவுகளை மீள் உறுதி செய்து கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் திகதிக்குப் பின்னரான பதிவுகளுக்கு இலவச குடிதண்ணீர் இணைப்பு எதிர் வரும் காலங்களில் வழங்கப்படமாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-25-214)


## மேட்டுக் காணி விற்பனைக்கு உண்டு

கிளாலிச் சந்தியில் இருந்து இரண்டு கிலோ மீற்றர் (2Km) தூரத்தில் ஆறு ஏக்கர் (ஹெக்கர்) மேட்டுக் காணி விற்பனைக்கு உண்டு. அக்காணி நான்கு பக்கமும் 10 அடிக்கு ஒரு தூண் போட்டு ஏழுவரி கம்பி அடித்து கேற்றும் போட்டு பாதுகாப்பாக உள்ளது.

தொடர்பு:- 077 649 1027

(CS/55350) J-1

## வேலையாட்கள் தேவை

கட்டட நிர்மாண வேலைகளுக்கு மேசன் மற்றும் கூலி ஆட்கள் தேவை.

தொடர்புகளுக்கு:
076 760 0403

## சுத்திகரிப்பாளர் தேவை

K.K.S வீதி இணுவிலில் உள்ள உணவகம் ஒன்றிற்கு சுத்திகரிப்பாளர்கள் தேவை

தொடர்புகளுக்கு:
077 478 2628, 076 293 5195

## வங்கி மீதி வசதி (SHOW MONEY)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு:
074 173 7684

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில்
A-9 வீதி முகப்புடன் 14 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- இருபதடிப்பாதை (20).
- கைதடிச் சந்தி 100M தூரம்.
- சித்த வைத்தியசாலை முன்பாக.
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை.
- காணி கொள்முதல் செய்பவருக்கு பிரதேச சபை அனுமதி பெற்றுக் கொடுக்கப்படும்.
- ஒரு பரப்பின் விலை ரூபா. 2000000/= (இருபது இலட்சம் ரூபாய்)

Golden Real Estate (Pvt) Ltd.

077-029 4164
077-329 4130
077-294 1521

## வீடு வாடகைக்கு

யா / சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு கொடுக்கப்படும்.

தொடர்பு: 077 033 9477

## வேலையாள் தேவை

நாவற்குழியில் உள்ள விடுதிக்கு தங்கியிருந்து வேலை பார்ப்பதற்கு ஆள் தேவை.

தொடர்புகளுக்கு:
077 478 2628, 076 293 5195


## ஏற்க மறுக்கின்றது இதயம்
## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 07 . 05 . 1958

இறப்பு 13 . 06 . 2023

அமரர்

### மரிய அருளானந்தம் மரிய பேணாட்

ஓராண்டு சென்றதுவாம் அப்பா நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து. இன்னும் எத்தனை ஆண்டுகள் சென்றாலும் ஏற்றுக்கொள்ள முடியாதப்பா உங்கள் பிரிவை. ஆறுதல் சொல்ல ஆயிரம் உறவிருந்தும் அனாதையைப் போலவே உணருகின்றோம் அப்பா.
கலிகால உலகில் சாத்தியமிருந்தால் மீண்டும் ஒரேயொரு முறை எம்மிடம் வந்துவிட்டு போகமாட்டீர்களா அப்பா. அடுத்த ஜென்மத்திலும் உங்களுக்கே பிள்ளைகளாய் பிறக்கும் வரம் வேண்டும் அப்பா.

குறிப்பு :-


**இன்று (13.06.2024) வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு புனித லிகோரியார் ஆலயத்தில் முதலாம் ஆண்டு நிறைவு திருப்பலியைத் தொடர்ந்து அவரது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**பேரம்பலம் வீதி,
சாவகச்சேரி.**

**பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்.**

(CS/55355) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 20 . 11 . 1942

மறைவு 12 . 06 . 2024

### மார்க்கண்டு சிவசுப்பிரமணியம் (இமாசி)

**(ஓய்வுநிலை ஆசிரியர்-கொக்குவில் இந்துக் கல்லூரி)**

சரவணை மேற்கைப் பிறப்படமாகவும் ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு சிவசுப்பிரமணியம் நேற்று (12.06.2024) புதன்கிழமை காலமானார் அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு-சிவக்கொழுந்து தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான கந்தையா-நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தில்லைநாயகியின் பாசமிகு கணவரும் சிவநேசன் (உதவி ஆணையாளர், உள்நாட்டு இறைவரி திணைக்களம்-கொழும்பு), சிவசங்கர் (விரிவுரையாளர் ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையம் கொழும்பு), சிவதர்சினி (பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் திட்டமிடல் கிளை, மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அஜந்தினி (Quantity surveyor-கொழும்பு) நியோமி (கொமர்ஷல் வங்கி-கொழும்பு), பிரபாகரமூர்த்தி (பிரதேச செயலர் மருதங்கேணி), ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கலைமகள் (கனடா), பாலசுப்பிரமணியம், கைலாசபதி, காலம் சென்ற நாமகள் ஆகியோரின் அன்புச் சகோதரரும்,பவகரன், பவநிதா, அகரன், ஆதிரன், ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற விஜயநாதன் மற்றும் சபாநாதன் காலஞ்சென்ற லோகநாயகி சுந்தரலிங்கம் மற்றும் திருமங்கலநாயகி காலஞ்சென்ற செல்வநாயகி மற்றும் ஞானதேவன் (பின்லாந்து) காலஞ்சென்ற இராஜநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2024) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக மு.ப. 11.00 மணியளவில் கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**271/6 நாவலர் ஒழுங்கை
ஆனைப்பந்தி
யாழ்ப்பாணம்**

தகவல்:
**குடும்பத்தினர்.**
**021 222 8080**

(CS 733) V-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.06. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org